REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஜூன் 14 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN
වරු. 91 இல. 139
Wednesday 14, June, 2023
16 பக்கங்கள்
50/-

## தொடரான வீழ்ச்சியின் பின்னர்
# நாட்டில் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு
### 24 கரட் பவுண் ரூ.1,66,300



இலங்கையில் தங்கத்தின் விலை நேற்று சற்று அதிகரித்துள்ளதாக தங்க நகை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். கொழும்பு

06

## டெலிகொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதால்
# தேசிய பாதுகாப்புக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் ஏற்படாதென்பது உறுதி
### TRC யின் முன்னாள் தலைவர் Prof. ரொஹான் சமரஜீவ



டெலிகொம் நிறுவனத்தை தனியார்மயப்படுத்துவதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதென தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தெரிவித்தார். தேசிய பாதுகாப்பு தொடர்பிலான துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையானது கற்பனைகளை மையமாகக் கொண்டு காணப்படுவதாக

06

# சப்ரகமுக மாகாண ஆளுநராக நவீன் திசாநாயக்க நியமனம்
### ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க சப்ரகமுவ மாகாண ஆளுநராக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில், அவர் சப்ரகமுவ மாகாண ஆளுநராக சத்தியப் பிரமாணம் செய்தார்.

06



# அஸ்வெசும திட்டத்தின் கீழான நிவாரண கொடுப்பனவுகள் அடுத்த மாதம் முதல்
### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

03

# மக்கள் நலத் திட்டங்கள் அரசியல் நோக்கங்களுக்காக இழுத்தடிப்பா?
### ஒருபோதும் அனுமதிக்க முடியாதென்கிறார் அமைச்சர் டக்ளஸ்



கௌதாரிமுனை காற்றாலை திட்டத்தினூடாக எமது மக்களுக்கும் நாட்டுக்கும் எவ்வாறான நன்மைகளை கூடியளவு விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதிலேயே, ஆர்வமாக இருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறுகிய சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்படும் கால இழுத்தடிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்தார்.

06

## நுகர்வோருக்கு தரமான கலப்படமற்ற உணவுப்பொருளை வழங்க
# 159 வருடங்களின் பின் பாண் கட்டளைச் சட்டம் இரத்து
### புதிய சட்டமூலமொன்றை தயாரிக்க அமைச்சரவை அனுமதி



**காலத்துக்கேற்றவாறு நுகர்வோர் அதிகார சபை சட்டத்தின் நியதிகள் நடைமுறைப்படுத்தலின் போது, கட்டளைச் சட்டத்தில் சில நியதிகள் சிக்கலுக்குள்ளாகியுள்ளதையடுத்தே இத் தீர்மானம்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாணுக்கான கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பாண் விற்பனையை ஒழுங்குபடுத்தல் மற்றும் விற்பனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பாணுக்காக பழுதடைந்த மாவைக் கலப்பதைத் தடுத்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி 186413ஆம் இலக்க பாண் கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

06

## 2022 இல் சிறுபோக நெற் செய்கையின்போது
# உற்பத்திகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு
### அரசினால் 70 மில். ரூபா ஒதுக்கீடு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

சிறுபோக நெற் பயிர்ச் செய்கையின் போது (2022) பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்குவதற்காக அரசாங்கம் 70 மில்லியன் ரூபாவை

06

# இரண்டு வாரங்களில் 406 புதிய டாக்டர்கள் நியமனம்
### மருந்துகளின் விலைகளும் நாளை முதல் 16 வீதத்தால் குறைப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டில் நிலவும் டாக்டர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்திக்க எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள், 406 டாக்டர்களை புதிதாக சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

06

# மட்டக்களப்பில் படையினர் வசமிருந்த காணி விடுவிப்பு
### விரைவில் மக்களிடம் கையளிக்க ஏற்பாடு



மட்டக்களப்பில் நீண்ட காலமாக இராணுவத்தினர் வசமிருந்த காணிகள் விடுவிக்கப்பட்டு அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சித்தாண்டி பிரதேசத்தில் இராணுவ செயற்பாடுகளுக்காக நீண்ட காலமாக கையகப்படுத்தப்பட்டிருந்த

06



கொழும்பு 13, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்று நடைபெற்றபோது திருச்சொரூப பவனி நடைபெற்றதைப் படத்தில் காணலாம். (படம். கொழும்பு வடக்கு நிருபர்)

# யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர்கள் ராஜபக்ஷாக்களே
### மக்கள் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார்கள் – சாகர



முப்பது வருடகால பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த ராஜபக்ஷாக்களை பெரும்பாலான மக்கள் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார்கள். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தவறிழைத்தாரே தவிர, பொதுஜன பெரமுன தவறிழைக்க

06

# சிறுபான்மைச் சமூகங்களுக்காக பொதுவான வரைபு அவசியம்
### ஜனாதிபதி பொறுப்புடன் செயற்படுவதாகவும் அமைச்சர் நஸீர் பாராட்டு



முஸ்லிம் சமூகத்தின் சமகால சவால்களை தீர்த்துவைக்கும் பொதுவான வரைபைத் தயாரிக்கும் தருணம் வந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், இதுபற்றித் தெரிவித்துள்ளதாவது: சிறுபான்மையினர், இனியும் தனித்தனியாகச் செயற்பட்டு சமூக உரிமைகளை வெல்ல முடியாது.

06



# வீதி விபத்துக்களால் நான்கு மாதங்களில் 709 பேர் பலி
### மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகம்

03

# நாட்டை கட்டியெழுப்ப புதிதாக சிந்திப்போம்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



வங்குரோத்தடைந்த நாட்டிலிருந்து நாம் மீள்வதுடன், மீண்டுமொரு வங்குரோத்து நிலைக்கு நாட்டை கொண்டு செல்லாமலிருக்க, எமது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

06

# தமிழ் பௌத்த வரலாற்றை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி
### மனோ கணேசன் MP பாராட்டு



முதன்முறையாக நாட்டின் தலைவர், இலங்கை தீவின் "தமிழ் பௌத்த வரலாற்றை" பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராட்டுவதாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன்

06

## ஊடக ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டம்
# ஊடக நெறிமுறைகளை மீறுவோரே பயப்படவேண்டும்



### ஜனாதிபதியின் ஆலோசகர் ஆஷு மாரசிங்க

ஊடக ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டம் குறித்து ஊடக நெறிகளை பின்பற்றுவோர் அச்சப்படத் தேவையில்

06

# போலி கச்சேரி சுற்றிவளைப்பு பாணந்துறையில் ஒருவர் கைது
### 31 அரச இலச்சினை முத்திரைகளும் மீட்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



போலியாக நடத்தப்பட்டு வந்த திருட்டுக் கச்சேரியை நேற்று அதிகாலை பொலிஸார் சுற்றிவளைத்தனர். இதன்போது, முன்னாள் நகரசபை எழுதுவினைஞர் ஒருவரை கைது செய்ததாக பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

06

## நெளுக்குளம் மாடு கடத்தல் சம்பவங்கள்

# வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விசேட கரிசனை

வவுனியா விசேட நிருபர்



வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அதிகளவில் இடம்பெறும் மாடு கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை (13) வவுனியாவில் நடைபெற்ற போது, வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அதிகளவாக மாடுகள் கடத்திச் செல்லப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளதாக, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த வவுனியா மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மாடுகள் களவாடப்பட்டமை தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை (12) இருவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதாக, தெரிவித்தார்.

அத்துடன், மாடுகள் கடத்தல் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் வீ.ஆனந்தசங்கரியின் பிறந்தநாள் நிகழ்வு



கிளிநொச்சி மாவட்ட மூலகர்த்தாவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான வீ.ஆனந்தசங்கரியின் 90ஆவது பிறந்தநாள் நிகழ்வு மற்றும் மக்களின் மதிப்பளிப்பு நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை (15) பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி கனகபுரம் நண்பர் விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் உரையாற்றவுள்ளதாகவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## முல்லைத்தீவு விவசாயிகளுக்கு மானிய உரத்துக்கான வவுச்சர்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்



சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் முல்லைத்தீவு விவசாயிகளுக்கு மானிய உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர் வழங்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (12) முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உடையார்கட்டுக் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழுள்ள 665 விவசாயிகளுக்கு வவுச்சர் வழங்கப்பட்டன. ஹெக்டேயரொன்றுக்கு 20 ஆயிரம் ரூபா வவுச்சர் வழங்கப்பட்டது.

பாண்டியன்குளம், உடையார்கட்டுக் கமநல சேவைத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ர.மயூரன் தலைமையில் அத்திணைக்களத்தில் விவசாயிகளுக்கு வவுச்சர் வழங்கி வைக்கப்பட்டதுடன், வவுச்சரைப் பெற்றுக்கொண்ட விவசாயிகள் மானிய உரத்தைப் பெற்றுக்கொண்டு வருகின்றனர். உடையார்கட்டில் 1,505 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் கமநலசேவைத் திணைக்களத்தில் வவுச்சரைப் பெற்றுக்கொண்டு மானிய உரத்தை பெற்றுக்கொள்ள முடியுமென, பாண்டியன்குளம், உடையார்கட்டுக் கமநல சேவைத் திணைக்களம் தெரிவித்தது.

## காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர் நலன் கருதி புதிய பஸ்சேவை

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாண மாவட்டத்தின் கீரிமலை, நல்லிணக்கபுரம் பிரதேசத்திலிருந்து காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிவரை புதிய தனியார் பஸ் சேவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (12) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மயிலிட்டி நோக்கிப் புறப்படும் 769 இலக்க தனியார் பஸ் சேவை மாவிட்டபுரம் கீரிமலை வீதியூடாக நல்லிணக்கபுரம் சென்று, யா/ நடேஸ்வராக் கல்லூரி வழியாகப் பயணிக்குமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை நாட்களில் காலை 7.10 மணிக்கும் 7.30 மணிக்கும் 7.40 மணிக்கும் இந்த பஸ் சேவை நடைபெறுவதுடன், மதியம் 1.40 மணிக்கு பாடசாலையிலிருந்து நல்லிணக்கபுரம்வரை நடைபெறும்.

முதலாம் மற்றும் இரண்டாம் தர மாணவர்கள் இந்த பேருந்து சேவையில் இலவசமாக பயணிக்க முடியுமென்பதுடன், ஏனைய தர மாணவர்கள் சாதாரண கட்டணத்தைச் செலுத்தி பயணிக்க முடியுமெனவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். யா/நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் நலன் கருதி நடேஸ்வரா கல்லூரியில் கல்வி கற்ற ஐரோப்பிய பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரணை இலுப்பைக்குளத்தில் உலர் உணவு விநியோகம்

தலைமன்னார் விசேட நிருபர்

மன்னார் மாவட்ட துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு சுகாதாரம் சம்பந்தமான கருத்தரங்கு நடத்தப்பட்டதுடன், வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 26 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இரணை, இலுப்பைக்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (12) இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

மன்னார் மாவட்ட துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத் தலைவர் அருட்பணி நவரட்ணம் அடிகளாரின் ஒழுங்கமைப்பின் கீழ் அந்தச் சங்கத்தின் செயலாளர் சிங்கிலேயர் பீற்றர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டு இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர்.






யாழ். காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு கனடா காரை கலாசார மன்றத்தினூடாக ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் அன்பளிப்பாக நேற்று செவ்வாய்க்கிழமை (13) வழங்கப்பட்டன. 'ஒருத்தி' திரைப்பட தயாரிப்பாளர் பி.எஸ்.சுதாகரன், கனடா காரை கலாசார மன்றத்துக்கு 'ஒருத்தி' திரைப்படத்தை இலவசமாக திரையிட அனுமதி வழங்கியதன் மூலம் பெறப்பட்ட நிதியில் கனடா காரை கலாசார மன்றம் மருந்துகளை இலவசமாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் 'ஒருத்தி' திரைப்படத் தயாரிப்பாளர் சுதாகரன் கலந்து கொண்டார்.

## பளையில் கனரக வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்து

கிளிநொச்சி குறூப் நிருபர்



பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடி பிரதேசத்தில், ஏ 09 வீதிக்கு அருகில் கனரக வாகனமொன்று வீதியோரத்திலிருந்த மின்கம்பத்துடன் மோதி நேற்று செவ்வாய்க்கிழமை (13) காலை 6.45 மணியளவில் விபத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்தக் கனரக வாகனம், மின்கம்பத்துடன் மோதியதைத் தொடர்ந்து வீடொன்றின் மதில் மேல் விழுந்து விபத்துக்குள்ளானமை தொடர்பாக தமது விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்வி சமய ஆலோசனை சபை நியமனம்



விழுமியங்களை மேம்படுத்துவதற்கு அதிகாரிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயலூக்கமான பங்களிப்பை வழங்கும் நோக்கில் கல்வி சமய ஆலோசனை சபையின் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தலைமையில் கல்வி அமைச்சில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தில் ஆன்மீக முன்னேற்றங்களை வலுப்படுத்தும் நோக்கில் 128 உறுப்பினர்களுக்கு இதன்போது நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பௌத்த, ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்துவ மதத் தலைவர்கள் உட்பட கல்வி இராஜாங்க அமைச்சர் திரு.அரவிந்த் குமார் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

### மனைவி வீட்டை விட்டு வெளியேற்றம்

## இளைஞன் தொலைபேசி கோபுரத்தில் ஏறி ஆர்ப்பாட்டம்; திறப்பனையில் சம்பவம்

திறப்பனை தினகரன் நிருபர்



குடும்ப தகராறு காரணமாக தொலைபேசி சமிக்ஞை கோபுரம் ஒன்றில் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திறப்பனை பகுதி இளைஞன் ஒருவனை நேற்று முன்தினம் (12) காலை திறப்பனை பொலிஸாரின் தலையீட்டினால் பத்திரமாக கீழிறக்கப்பட்டதாக திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

திறப்பனை பொலிஸ் பிரிவில் பிரதேச சபை எல்லையில் திறப்பனையை சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது மனைவி கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாகவும், அதனால் சிறு குழந்தையுடன் எந்த வேலைக்கும் செல்ல முடியாமல் நிர்க்கதியாக இருப்பதாகவும் கூறி தொலைபேசி சமிக்ஞை கோபுரத்தில் ஏறியுள்ளார். இச் சம்பவம் (12) காலை 8.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

பிரதான பொலிஸ் பரிசோதகரின் தலையீட்டினால் இளைஞன் கீழிறக்கப்பட்டான். குறித்த இளைஞன் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில், தனது குழந்தையைப் பாடசாலையிலிருந்து விலக்கி, தனது சொந்த கிராமமான விலச்சி பகுதிக்கு செல்ல வாய்ப்பளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். குறித்த இளைஞன் பின்னர் திறப்பனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## இந்த வருடத்தில் 5,46,686 சுற்றுலா பயணிகள் இலங்கை வருகை

### 8 தினங்களில் மாத்திரம் 20,000 பேர் வருகை

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்த வருடத்தின் நேற்று வரையான காலப்பகுதியில் நாட்டிற்கு ஐந்து லட்சத்து 46 ஆயிரத்து 686 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை இந்த மாதத்தின் முதல் எட்டு தினங்களில் மாத்திரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 22 ஆயிரத்து 200 பேர் நாட்டுக்கு வருகை தந்ததாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கடந்த எட்டு தினங்களில் இந்தியாவிலிருந்து 6348 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் ரஷ்யா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜெர்மன் ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் நேற்றுடனான காலப்பகுதியில் பெருமளவு சுற்றுலா பயணிகள் ரஷ்யாவில் இருந்தே வருகை தந்துள்ளதாகவும் அதற்கிணங்க ரஷ்யாவிலிருந்து ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 227 உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கு மேலதிகமாக சீனா, கனடா, அமெரிக்கா, மாலைதீவு பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக மே மாதத்தில் குறைவான அளவு சுற்றுலா பயணிகளே நாட்டுக்கு வருகை தந்ததுடன் இம்முறை கடந்த மாதத்தை விட சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாகவும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு செயலகம் தெரிவித்துள்ளது.

## ஹஜ் பெருநாள் மலிவு விற்பனை கூடம்

### ஹாசிம் உமர் அதிதியாக பங்கேற்பு

திருமதி நாதியா யாகூப்பின் ஏற்பாட்டில் ஹஜ் பெருநாளை முன்னிட்டு (EID SOUQ SHOPPING FESTIVAL) எதிர்வரும் 17ம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணி முதல் இரவு 11.00 மணிவரை கொழும்பு 6, வெள்ளவத்தையிலுள்ள மியாமி வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவு, வீட்டு உபயோகப் பொருட்கள், ஆடைகள் பேக்கரி மற்றும் இனிப்பு பொருட்கள் போன்றவை இதில் விற்பனை செய்யப்படவுள்ளன. இந் நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## கால்நடைகளுக்கு புதிய வைரஸ் நோய்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கால்நடைகளுக்கு வைரஸ் நோய் பரவி வருவதனாலும் அவைகளுக்கு தேவையான மருந்துகள் இல்லாமையினாலும் கால்நடைகள் அதிகளவில் இறப்பதாக பொலன்னறுவை மெதிரிகிரிய பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு பொலன்னறுவை மாவட்டத்தில் குறைந்தளவில் காணப்பட்ட நோய் தற்போது பிரதேசம் தோறும் பரவியுள்ளதாக தெரியவந்துள்ளது.

## களுத்துறை பிரதேசத்தில் 12 மணிநேர நீர்வெட்டு

(பேருவளை விசேட நிருபர்)

அளுத்கம, மத்துகம, அகலவத்த ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டத்தில் அத்தியாவசிய விஸ்தரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று (14) புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலான 12 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

வாத்துவ, வஸ்கடுவ, பொத்துபிட்டிய, களுத்துறை வடக்கு, களுத்துறை தெற்கு, கட்டுக்குருந்தை, நாகொட, பயாகல, மக்கொனை, போம்புவல, அளுத்கம, தர்கா நகர், பெந்தோட்டை, களுவாமோதர, மொரகல்ல, பிளம்னாவத்த ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜுன் 14 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## இந்த வருடத்தில் தேர்தல் நடைபெற வாய்ப்பில்லை

**அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு**



இந்த வருடத்தில் தேர்தல் நடத்தப்படக்கூடிய எந்தவொரு வாய்ப்புமில்லையென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை நிறைவு செய்யாமல், செப்டெம்பர் மாதத்துக்குள் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு இயல்பு நிலைக்கு திரும்பிய பின்னர் உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்படுமென அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

## பாதியில் நிறுத்தப்பட்டுள்ள கட்டுமான பணிகளை 2024 க்குள் நிறைவு செய்ய திட்டம்

### அமைச்சர் பிரசன்ன நிதி அமைச்சுடன் பேச்சு



பாதியில் நிறுத்தப்பட்டுள்ள நிர்மாணப்பணிகள் சகலதும் அடுத்த ஒரு வருடத்துக்குள் நிறைவடையுமென எதிர்பார்ப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்தா தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தற்போது நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதியில் நிறுத்தப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளின் வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் அடங்கிய திட்ட அறிக்கையை, ஒரு வாரத்திற்குள் சமர்ப்பிக்குமாறும் அமைச்சின் செயலாளர் ஒப்பந்ததாரர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

திட்ட அறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

நிர்மாணப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஒப்பந்ததாரர்களுடன் நேற்று (13) பத்தரமுல்லை சுஹுருபாயவில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில்,கலந்து கொண்ட போதே அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்தா இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் 20 சதவீதம் கட்டுமானத் தொழிலைச் சார்ந்துள்ளது. இந்தத் தொழிலைச் சுற்றி உருவாக்கப்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைகள் மூலம் ஏராளமான மக்கள் வாழ்வாதாரத்தை உருவாக்குகின்றனர்.

இதனாலே, நிர்மாணத்துறையை பாதுகாப்பதில் எமது அமைச்சு மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுகிறது. கொரோனா வைரஸ் பரவல், "அரகல"போராட்டம், டொலரின் பெறுமதி அதிகரிப்பு, நிர்மாணப் பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால், கடந்த இரண்டு வருடங்களாக நாட்டின் நிர்மாணத்துறை நல்ல நிலைமையில் இல்லை. இதனால், ஒப்பந்ததாரர்களும் அரசாங்கமும் நகர அபிவிருத்தி அமைச்சும் பல நெருக்கடிகளை எதிர்கொண்டன . கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டதால் எங்களை விட ஒப்பந்ததாரர்கள் அதிக பிரச்சினைகளை எதிர்கொண்டனர். தற்போது இயந்திரங்கள் பழுதடைந்து தொழிலாளர்கள் வெளிநாடு சென்று விட்டனர். கட்டுமானப் பணிகளுக்கு நிதி கிடைக்காததால், ஒப்பந்ததாரர்களைப் போலவே பணியாளர்களும் பொருளாதார ரீதியாக சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்விடயங்களில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார்.

## தம்புத்தேகம வைத்தியசாலை டாக்டர் நேற்று சடலமாக மீட்பு

**பொலிஸார் தீவிர விசாரணை**

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

அநுராதபுரம், தம்புத்தேகம அரசாங்க வைத்தியசாலையில் சேவை செய்துவந்த வைத்தியர் ஒருவர், மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் விடுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு நேற்று (13) பிற்பகல் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்தனர். அங்கு, வைத்தியர் விடுதியில் மர்மமான முறையில் உயிரிழந்திருந்த அவரது சடலத்தை வைத்தியசாலை ஊழியர்களின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

தம்புத்தேகம வைத்தியசாலையின் சிறுநீரக பிரிவில் சேவைசெய்து வந்த குருநாகல் நாரம்பல பகுதியை வசிப்பிடமாக கொண்ட 35 வயதுடைய கே.ஏ.எஸ். கெலும் திசாநாயக்க எனப்படும், ஒரு பிள்ளையின் தந்தை இவரெனத் தெரியவந்துள்ளது.

விடுதியில் சில தினங்களுக்கு முன்னர் இவ்வைத்தியர் உயிரிழந்திருக்கலாமென ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பல கோணங்களிலும், தம்புத்தேகம பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டமூலம்**

## ஊடகங்களை கட்டுப்படுத்தும் எந்த அவசியமும் அரசுக்கு கிடையாது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டத்தின் மூலம் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவித அவசியமும் அரசாங்கத்துக்குக் கிடையாதென, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தை மீள வழங்காமலிருப்பதற்கு எந்தவொரு சரத்தும் அதில் கிடையாதெனவும், இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றுள்ள அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் தமது கேள்வியின் போது, உத்தேச ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டமூலம் தொடர்பில் கேள்வியெழுப்பினர்.

06

## தேர்தல்கள் தொடர்பில் புதிய சட்டம் விரைவில் அறிமுகம்

### அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தேர்தல் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கான சட்டமூலத்தை தயாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைத்தளத்தில் இடம்பெற்றது. இதன்போதே, அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், பாராளுமன்ற தேர்தல் சட்டம், உள்ளூராட்சி சபை தேர்தல் கட்டளைச் சட்டம், ஜனாதிபதி தேர்தலுக்கான விசேட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் மாகாண சபை தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பில், கடந்த வருட டிசம்பரில் (12) அமைச்சரவை தீர்மானித்தது.

இவ்வகையில் தேர்தல் தொடர்பான சட்டங்களை தனித்தனியாக திருத்துவதற்குப் பதிலாக, புதிய தேர்தல் சட்டமொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வீதி விபத்துக்களால் நான்கு மாதங்களில் 709 பேர் பலி

### மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

வாகன விபத்துக்களால் இவ்வருடத்தின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் 709 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவ்விபத்துக்களில், பெருமளவானவை, மோட்டார் சைக்கிள்கள் சம்பந்தப்பட்டதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப்பேச்சாளர்: இவ்வருடத்தின் காலாண்டான ஏப்ரல் (30) வரை நாட்டில் 8,202 விபத்துக்கள்

இடம்பெற்றுள்ளன. இதில், 667 மிக மோசமானவை. இவ்விபத்துக்களில் 709 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, நபர்கள் படுகாயமடைந்த 2160 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் 3201 சிறு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

உயிரிழந்தோரின் தகவல்கள் படி பெருமளவு விபத்துக்கள் மோட்டார் சைக்கிள் சம்பந்தப்பட்டதாகவே உள்ளது. இதில் மரணமடைந்த 709 பேரில் 220 பேர் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர்களே. அத்துடன் வேறு நபர்கள் 102 பேரும் பாதசாரிகள் 176 பேரும் உயிரிழந்துள்ளனர். அதிகமான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள்கள் மூலம் இடம்பெற்றாலும், அதற்கு அடுத்தபடியான விபத்துக்கள் முச்சக்கரவண்டிகள் மூலமே இடம்பெற்றுள்ளன.

இதன்மூலம் வீதி விபத்துக்களில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளாலேயே இடம்பெறுகின்றன என்பது உறுதியாகின்றது.

இதனால், போக்குவரத்து சட்டங்களை முறையாக கடைப்பிடித்தால் இத்தகைய விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



புத்தளம் தில்லையடி முஹாஜிரீன் அரபுக்கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில்,விஷேட பேச்சாளராகக் கலந்து கொண்ட (11) அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் ரிஸ்விமுப்திக்கு "ஷேகுஸ்ரீலங்கா"பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிகழ்வின் பிரத அதிதியான பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட்பதியுதீன் கல்லூரி சார்பாக பட்டத்தை வழங்கினார்.கல்லூரி அதிபர் முபாரக் மௌலவி அல்ரஷாதி, முன்னாள் எம்.பி நவவி உட்பட கலந்துகொண்டோரை படத்தில் காணலாம்.

## அஸ்வெசும திட்டத்தின் கீழான நிவாரண கொடுப்பனவுகள் அடுத்த மாதம் முதல்

**நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அஸ்வெசும திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள கொடுப்பனவுகள், அடுத்த மாதம் முதல் வழங்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். பிரதிபலன்களை பெற்றுக் கொள்ளக்கூடிய பயனாளிகள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு, இது தொடர்பான நடவடிக்கைகளை பெருமளவில் பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் மேற்படி குழுவினால் 95 வீதமான பயனாளிகளின் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ், சிங்கள சகோதரர்கள் இணைந்து கதிர்காம பாதயாத்திரை





சிங்கள மற்றும் தமிழ் இளைஞர்கள்,யுவதிகள் இணைந்து கதிர்காமத்துக்கான பாதயாத்திரையை ஆரம்பித்துள்ளனர். மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து ஆரம்பமான இந்த யாத்திரையில், நூறு சிங்களவர்களும்,நூறு தமிழர்களும் பங்கேற்றுள்ளனர்.சகல மத மதகுருமார்கள், இந்து, பௌத்த சங்கத்தின் உயர் பீட உறுப்பினர்கள், கிழக்கு மகாண இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு இவர்களை நேற்றுக் காலை (13) வழியனுப்பி வைத்தபோது பிடிக்கப்பட்ட படம்.

## இலங்கையின் உணவு பாதுகாப்பின்மை தொடர்பில் ஊடக அறிக்கைகளுக்கு ஜனாதிபதி அலுவலகம் மறுப்பு

இலங்கை மக்களில் சுமார் 75 இலட்சம் பேருக்கு போதுமான உணவு கிடைப்பதில்லை என வெளியான ஊடக அறிக்கைகளுக்கு ஜனாதிபதி அலுவலகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு வேலைத்திட்டம்(WFP) மற்றும் உணவு பாதுகாப்பு, விவசாய அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து மேற்கொண்டுள்ள உணவு பாதுகாப்பு தொடர்பிலான மதிப்பீட்டு அறிக்கை (CFSAM) இலங்கையின் உணவு பாதுகாப்புச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுவதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார். உலக உணவு வேலைத்திட்ட உதவிச் செயலகத்தின் (PSWFPC) பணிப்பாளர் நாயகமுமான கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன 2023 மே 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட உணவு பாதுகாப்பு செயற்பாடுகள்தொடர்பிலான (CFSAM) அறிக்கையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 197.74 | 210.40 |
| கனடியன் டொலர் | 219.56 | 232.72 |
| யூரோ | 316.35 | 334.75 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 218.52 | 231.63 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 368.72 | 388.64 |
| சுவிஸ் பிராங்க் | 323.17 | 343.66 |
| அமெரிக்க டொலர் | 294.91 | 309.22 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 796.87 | கட்டார் ரியால் | 82.41 |
| குவைத் டினார் | 977.37 | சவூதி ரியால் | 80.11 |
| ஓமான் ரியால் | 780.35 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 81.79 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22



குறள் தரும் சிந்தனை

கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்

ஒருவன் தன்னிலை மறந்து மயங்கியிருப்பதற்காகப், போதைப் பொருளை விலை கொடுத்து வாங்குதல் விபரிக்கவே முடியாத மூடத்தனமாகும்.

## டெங்கு நுளம்பு ஒழிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்

நாட்டில் டெங்கு வைரஸ் நோய்த்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 40 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் மேல்மாகாணத்தை சேர்ந்தவர்களாவர். அவர்களில் கம்பஹா, கொழும்பு ஆகிய இரு மாவட்டங்களில்தான் அதிகளவிலானோர் இந்நோய்க்கு உள்ளாகி உள்ளனர்.

இந்த நிலையில் டெங்கு நுளம்பு ஒழிப்புக்கான மூன்று நாட்கள் விஷேட வேலைத்திட்டமொன்று இன்று 14 ஆம் திகதி முதல் மேல்மாகாணத்தில் ஆரம்பமாகியுள்ளது. அதேநேரம் கண்டி, குருநாகல், புத்தளம், மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஆனால் நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களிலும் பதிவாகக் கூடிய நோயாக விளங்குகிறது இந்நோய். டெங்கு ஒழிப்புக்கான தேசிய கட்டுப்பாட்டுப் பிரிவு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

அந்த வகையில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஜுன் மாதத்தின் 10 ஆம் திகதி வரையும் 43 ஆயிரத்து 346 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவை இவ்வாறிருக்க, இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 25 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் என்று சுட்டிக்காட்டியுள்ள டெங்கு ஒழிப்புக்கான தேசிய கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் நளின் ஆரியரட்ன, தற்போது நாட்டில் 67 மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்நிலை நீடிக்குமாயின் இம்மாத இறுதிக்குள் டெங்கு நோய்க்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்' என்றும் தெரிவித்துள்ளார்.

'தற்போதைய மழைக்காலநிலையைத் தொடர்ந்து டெங்கு வைரஸை காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கம் பெரிதும் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்நிலைமை நீடிக்குமாயின் இம்மாத இறுதியாகும் போது நாட்டில் டெங்கு நோய்க்கு உள்ளாகக் கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து டெங்கு அபாயநிலை ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித்த அலுத்கே குறிப்பிட்டிருக்கின்றார்.

மழைநீர் தேங்கும் இடங்களில் பல்கிப் பெருகும் நுளம்புகள் டெங்கு வைரஸ் கிருமிகளைப் பரப்புகின்றன. இந்நோய் தொடர்பில் தற்போது நிலவும் நிலைமை ஆரோக்கியமானதாக இல்லை. அதனையே இத்தகவல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதனால் இந்நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான பணிகளில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவ்விடயத்தில் பொது மக்களுக்கு அதிக பொறுப்புள்ளது. குறிப்பாக வீடுகளையும், சுற்றாடலையும் மழைநீர் தேங்கி நுளம்பு பெருக முடியாதபடி சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக பாடசாலைகள் உள்ளிட்ட பொதுக்கட்டடங்கள் மற்றும் பொதுஇடங்களின் சுத்தம் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். நாட்டில் டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளவர்களில் 25 வீதமானோர் பாடசாலை மாணவர்களாக இருப்பது இதனைத் தெளிவாக எடுத்தியம்புகின்றது. அதனால் டெங்கு தாக்கத்தில் இருந்து தம் பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு பெற்றோரும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக பாடசாலைக் கட்டடங்களையும் அவற்றின் சுற்றாடலையும் நுளம்பு பெருக முடியாதபடி பேணிக் கொள்வதற்கு பங்களிக்க வேண்டும். இது விடயத்தில் பெற்றோரும் சமூக நலவிரும்பிகளும் கவனயீனமாக நடந்து கொள்ளக்கூடாது.

இந்நிலையில்தான் டெங்கு நுளம்பு பல்கிப் பெருகும் வகையில் காணப்படக்கூடிய வீடுகள், கட்டடங்கள் மற்றும் பொது இடங்களுக்கு அடுத்த வாரம் முதல் அபராதம் விதிக்கும் திட்டமும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட உள்ளது. டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் அவசியமும் முக்கியத்துவமும் இதன் ஊடாக வலியுறுத்தப்படுகிறது.

ஆகவே நுளம்பு பல்கிப்பெருக முடியாதபடி வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருப்பதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக மழைநீர் தேங்க இடமளிக்கக் கூடாது. கைவிடப்பட்ட சிரட்டைகள், பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்கள், யோகட் கப்புகள், டயர்கள் உள்ளிட்ட அனைத்து திண்மக் கழிவுப்பொருட்களையும் முறையாகவும் தொடராகவும் அப்புறப்படுத்தி சுத்தத்தையும் உலர்நிலையையும் பேண வேண்டும். அப்போது இவ்வின நுளம்புகள் பல்கிப் பெருக வாய்ப்பு இராது. டெங்கு ஒரு அச்சுறுத்தலாகவும் அமையாது.

editor.tkn@lakehouse.lk

# பேராசிரியர் துரைராஜா போன்ற மனிதநேயர்கள் இம்மண்ணில் இனிமேல் தோன்றுவது அரிது

## அன்னார் மறைந்து 29ஆண்டுகள் (10.11.1934–11.06.1994

போர்ச் சூழல் காரணமாக எவரும் வரத்தயங்கிய 1988 காலப்பகுதியில் (செப்டெம்பர் மாதம்) துணிச்சலுடன் யாழ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இன்முகத்துடன் ஒருவர் பதவியேற்றார். அவர்தான் பேராசிரியர் அழகையா துரைராசா.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீடம் ஆரம்பிக்கப்படும் என்ற கொடுத்திருந்த வாக்குறுதியை பெற்றுக் கொண்டே அவர் பதவியேற்றுக் கொண்டார்.

யாழ்குடாநாட்டின் தரைக்கீழ் நீர்சேமிப்பின் ஊற்று அமைப்பின் முன்னோடியும், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை உருவாக்கியவருமான பேராசான் துரைராசா 1994 ஜீன் 11 இல் காலமானார். கடந்த11 ஆம் திகதி அன்னாரின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

1990 களில் யாழ்ப்பாணம் பொருளாதார சிக்கலில் தவித்திருந்த பொழுது, எல்லாத்தரத்திலான எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில்நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும், சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால திட்டமிடலை மேற்கொண்டவர் பேராசான் துரைராசா.

தமிழ் பேசும் மக்கள் நற்சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காக பல்கலைக்கழக கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளியார் கற்கை போன்றவற்றை அறிமுகப்படுத்தி, யாழ்ப்பாண சமூகத்தை பல்கலைக்கழகம் வரைகொண்டு வந்தவர்.

வடக்கு, கிழக்கு மலையகத் தமிழர்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாக இருப்பதால் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் நிறுவியதில் முதன்மை வகித்தவரும் அவரே. ஆனாலும் பேராசிரியரின் பெருங்கனவு பல வருடங்களின் பின்பே கிளிநொச்சி அறிவியல் நகரில் யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட அங்குரார்ப்பண நிகழ்வுடன் பூர்த்தியாகியது எனலாம்.



பேராசிரியர் அவர்கள் 1994 ஆம் ஆண்டு விழிமூடும் வரை, கொடிய நோயின் பிடியில் அவர் அகப்பட்டு இருந்தாலும், யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக அளப்பெரும் சேவை புரிந்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில், அவர் தனது வதிவிடமான வடமராட்சியின் வதிரி பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு வல்லைவெளியினூடாக போர் மேகங்கள் சூழ்ந்திருந்த காலங்களில் 30 இற்கும் மேற்பட்ட கிலோமீட்டர் தூரத்தை மிதிவண்டியில் பயணித்திருந்தார். மக்களின் துன்ப துயரங்களை தன் தோளில் சுமந்தவர் அவர்.

வடமராட்சியில் கம்பர்மலையில் இமையாணனைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அழகையா_ செல்லம்மா ஆகியோருக்கு 1934 நவம்பர் 10 இல் அவர் பிறந்தார். இளமையில் ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும், கற்று, 1953 ஜீலையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

அதன்பின் குடிசார் பொறியியலில் 1957 ஆம் ஆண்டில் இளமாணி பட்டம் பெற்றார்.1958 மார்ச் வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி, நான்கு மாதங்கள் பொதுப்பணித் திணைக்களத்தில் இளைய பொறியியலாளராகப் பணியாற்றினார்.

ஆய்வின் மூலம் 1962 1988 செப்டம்பர் முதல் 1994 மார்ச் வரை துரைராசா யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார். மருத்துவக் காரணங்களுக்காக யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகி கொழும்பு சென்று அங்குள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் சிறிதுகாலம் பணியாற்றினார்.1994 ஜீன் 11 அன்று இரத்தப்புற்றுநோயினால் ஏற்பட்ட இதய செயலிழப்பினால் கொழும்பில் காலமானார்.

மண் போற்றும் மானுடவியலாளனான துரைராசா 1977 முதல் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்திலும், 1979 முதல் இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்திலும், 1985 மே முதல் ஐக்கிய இராச்சியத்தின் குடிசார் பொறியியல் நிறுவனத்திலும் உறுப்பினராக இருந்தார்.

1986 இல் இவர் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்தின் தலைவராகவும், ஒக்டோபர் 1989 முதல் அக்டோபர் 1990 வரை இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். இவர் மண் பொறியியலில் நிபுணராகவும் இருந்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் காணப்படும் 'அக்பர் பாலம்' பேராசிரியர் துரைராசாவினால் அமைக்கப்பட்டது. இப்பாலம் மற்றோர் பேராசிரியர் ஒருவர் முன்வைத்த சவாலை ஏற்று மகாவலிகங்கைக்கு குறுக்கே ஒரேயொரு தூணை எழுப்பி பேராசிரியரின் தொழில்நுட்பத்தில் கட்டப்பட்டது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் 1992 இல் உருவானதும் பேராசியரின் சிந்தனையில்தான். மாணவர்களானாலும் சரி, பொதுமக்களாலும் சரி எந்நேரத்திலும் எவ்விடத்திலும் அவரை அணுகி தமது பிரச்சினைகளை எடுத்துக் கூற முடிந்தது. அதற்கு அவர் மூலம் தீர்வொன்றை காணக்கூடிய பிறரை மதிக்கும் நற்குணமே அவருக்கு உயர்ச்சியைக் கொடுத்தது எனலாம்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# கிழக்கில் இனநல்லுறவு வலுப்படுத்தப்படுவது அவசியமென்று மாகாண ஆளுநர் வலியுறுத்தல்





## ஊடகவியலாளர்களுடன் அம்பாறையில் சிநேகபூர்வமான கலந்துரையாடல்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்குமிடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் அம்பாறையிலுள்ள ஆளுநரின் விடுதியில் நடைபெற்றது. ஆளுநர் செந்தில் தொண்டமான் இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் மாகாண அபிவிருத்தி, இனநல்லிணக்கம் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் ஆளுநருக்கும் இடையிலான நல்லுறவின் அவசியம் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் கருத்துத் தெரிவிக்கும் போது, "கிழக்கு மாகாணம் ஒரு வளம் நிறைந்த மாகாணம். இதனைப் பயன்படுத்தாமல், நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யாமல் விடுவது என்பது துரதிர்ஷடமானதாகும். சுற்றுலாத்துறை, மீன்வளம் மற்றும் மண்வளம், கனியவளம் என ஏராளமான வளங்களை தன்னகத்தே வைத்துக்கொண்டு எந்த வளங்களும் அற்ற மாகாணமாக இருப்பது கவலையான விடயம்" என்றார்.

"நமது நாட்டின் மொத்த கடன் தொகை 60பில்லியன் அமெரிக்கா டொலராக காணப்படுகின்றது. இதனை இப்படியே விட்டால் எதிர்கால சந்ததியினரின் நிலை என்னவாகும் என்று யோசித்துப் பாருங்கள். இந்த கடன் தொகையை 9 மாகாணங்களுக்கும் பிரித்தால் அண்ணளவாக 6 பில்லியன் வரும். இதனை மத்திய மாகாண மலையக மக்களினால் வருடாந்தம் 2 பில்லியன் செலுத்த முடியும். அம்மக்களின் தேயிலை ஏற்றுமதி வருமானம் அதற்கு பக்கபலமாக உள்ளது. மூன்று வருடங்களில் அம்மாகாண மக்கள் அக்கடனை செலுத்த முடியும். ஆனால் கிழக்கு மாகாணத்திற்கான நிலையான வருமான வழிகள் எவை? எனவே இவை பற்றியும், தொழில் வாய்ப்புகள் பற்றியுமே அதிகம் சிந்தித்து செயலாற்ற வேண்டியுள்ளது. அதற்கு எனது இந்தப் பதவி மாத்திரம் போதுமானதல்ல. இங்குள்ள அனைவரினதும் ஒத்துழைப்பும் அவசியம்" என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

" ஊடகவியலாளர்கள் என்பவர்கள் ஒரு தேசத்தின் முக்கிய வகிபங்கினை கொண்டவர்கள். அவ்வாறான உங்களின் பங்களிப்பு ஆளுநராகிய எனக்கு மிக அவசியம். மக்கள் குறைகளை உங்களிடமே முன்வைப்பர். அதனை வெளிகொணர்ந்து அதற்கான தீர்வினை வழங்குவது மிக அவசியம். அதற்கான முறைமைகள் சிலநேரம் காலதாமதத்தினை ஏற்படுத்தலாம். தீர்வை வழங்குவதே முதன்மையானது என்கிற வகையில் அதனை என்னிடம் நேரடியாக தெரிவிக்கின்ற போது கால நேர விரயங்கள் தவிர்க்கப்பட்டு விரைவான தீர்வு வழங்கப்படும் என்பதனை உறுதிபடக் கூறுகின்றேன்" என்றார் ஆளுநர்.



"கிழக்கு மாகாணத்தினை அபிவருத்தி செய்வதற்கு இந்திய அரசாங்கம், ஐக்கிய அரபு இராச்சியம் என்பன இப்போது முன் வந்துள்ளன. அதனை சாதாகமாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கான வேலைத் திட்டங்களை முன்மொழிந்து அவை ஊடாக எமது கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதே இன்றுள்ள தேவையாகவுள்ளது" என்று அவர் குறிப்பிட்டார்.

வளங்களைப் பயன்படுத்தி இந்த தேசத்துக்கு பயனளிக்கக்கூடிய வகையில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்பதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெளிவுடனும், உறுதியுடனும் இருப்பதனை காணமுடிகிறது.

அத்துடன் இங்குள்ள 70வீதமான அரச அலுவலர்களின் பணி அர்ப்பணிப்பு மிகுந்ததுடன், வினைத்திறனாகவும் காணப்படுவதாக அவர் கூறினார். அவர்களை இன்னும் வினைதிறன் மிகுந்த சேவையாளர்களாக மாற்றுவதுடன், வினைதிறனற்றுக் காணப்படுகின்ற 30வீதத்தினையும் மேம்படுத்த வேண்டிய கடமையும் காணப்படுவதாக இதன் போது அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆளுநர் செந்தில் தொண்டமான் சாதாரண மக்களின் துன்பங்களை நன்குணர்ந்தவர். மலையக மக்களின் வேதனத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்துவதற்கு அரசியலில் பல்வேறு கஷ்டங்களை கடந்தவர். மலையக மக்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்கு வழிசமைத்த சௌமியமூர்த்தி தொண்டமான் முதல், ஆறுமுகன் தொண்டமான் வரையான அரசியலை அருகில் இருந்து அவதானித்தவர். எனவே அவர் கிழக்கு மக்களின் பிரச்சினைகளையும் புரிந்து கொண்டு தீர்வுகளைக் காண பாடுபடுவார் என்பதே பலரதும் அபிப்பிராயமாக உள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாணம் மூவின மக்களும் செறிந்து வாழுகின்ற ஒரு மாகாணம். இங்குள்ள மக்களின் தேவைகள் என்ன? இங்குள்ள பிரச்சினைகள் என்ன என்பது பற்றியதான விடயங்களே இப்போதைக்கு ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டியவை.

(7ம் பக்கம் பார்க்க)



**றிசாத் ஏ காதர்**
**(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)**

# புதிய தலைமையக கட்டடத்தில் வெலிபல் பினான்ஸ் நிறுவனம்

பிரபல வெலிபல் குழுமத்தின் கீழ் இயங்கும் ஒரு முன்னணி நிதி நிறுவனமான வெலிபல் பினான்ஸ், தனது புதிய தலைமையகக் கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளது. இந்த அதிநவீன அலுவலகக் கட்டடத் தொகுதி கடந்த முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டது. முகாமைத்துவப் பணிப்பாளரான ஜயந்த ரன்கமுவ மற்றும் வெலிபல் பினான்ஸ் ஸ்தாபகரும் பணிப்பாளருமான அனுராத பெரேரா ஆகியோர் வைபவ ரீதியாக கட்டடத்தை திறந்து வைத்தனர்.

வெலிபல் பினான்ஸின் ஸ்தாபகரும் தலைவருமான தம்மிக்க பெரேரா மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜயந்த ரன்கமுவ ஆகியோர் இந்த கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டியிருந்தனர்.இரண்டரை வருட காலத்தில் கட்டட வேலைகளை முழுமையாக நிறைவு செய்யப்பட்டன.

முகாமைத்துவப் பணிப்பாளர் ஜயந்த ரன்கமுவ குறிப்பிடும்போது, 'எமது நிறுவனத்தின் மகத்தான பயணமானது மத்திய நிலையமொன்றின் இன்றியமையாத முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதோடு, இதன் துணையோடு வழமையான வணிக மேம்படுத்தல்களுக்கு அப்பால் சென்று பங்குதாரர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான மூலோபயமான தீர்மானங்களை மேற்கொள்வது சாத்தியமாகிறது' என்று தெரிவித்தார்.



தனிச்சிறப்பான ஓர் அடையாளச் சின்னமாக விளங்கும் அதிநவீன தலைமையகக் கட்டடத்தின் துணையோடு, நிதிச்சேவை வழங்கல் பிரிவில் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு முக்கிய நிறுவனமாக எதிர்வரும் சவால்களை சந்திப்பதற்கும் நிச்சயமற்ற சூழ்நிலைகளை சமாளித்து வெற்றிகரமாக முன்செல்வதற்கும் வெலிபல் பினான்ஸ் தயாராக உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.






# டெல்மார் தோட்ட தொழிலாளர்கள் ஒருமணிநேர எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

உடபுஸ்ஸலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெல்மார் மத்திய பிரிவு தோட்டத்தில் தொழிலாளர்கள் நேற்று காலை சுமார் ஒருமணிநேர எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

காலை 7.30 மணிமுதல் 8.30 மணிவரை வீதிக்கு இறங்கி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

டெல்மார் மத்திய பிரிவு தோட்டத்தில் 11 வயது பாடசாலை மாணவியொருவரிடம் 62 வயதுடைய நபரொருவர் தவறாக நடந்துகொண்டமையை கண்டித்து மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரியவருகின்றது.

இதுதொடர்பில் சிறுமி தனது தந்தையிடம் தெரிவித்ததையடுத்து உடபுஸ்ஸலாவ பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ய முற்பட்ட போது அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். எனினும் சிறிதுநேரத்தில் சந்தேகநபர் ஆட்டுப்பட்டியொன்றில் மறைந்திருந்த போது கைது செய்யப்பட்டார்.



விசாரணையின் பின்னர் வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது சந்தேகநபரை இரண்டு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. சிறுமியை வைத்திய பரிசோதனைக்குட்படுத்தி அதன் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உடபுஸ்ஸலாவை பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதனடிப்படையில் சிறுமி உடப்புஸ்ஸலாவை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் டெல்மார் மத்திய பிரிவு தோட்ட மக்கள், சிறுமி மீதான இந்நடவடிக்கையை கண்டித்தும்,சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆ.ரமேஷ்

## பாரத பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்கு ஜனாதிபதியுடன் அமைச்சர் ஜீவனும் பயணம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை 21ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளமை உறுதியாகியுள்ளது. ஜனாதிபதியுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானும் செல்கின்றார்.

இந்திய பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் ஜனாதிபதி தலைமையிலான இலங்கை குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல். பொருளாதார, பாதுகாப்பு மற்றும் கலை, கலாசார உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

பாரத பிரதமருடனான சந்திப்பின்போது மலையகம் 200 தொடர்பிலும் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மலையகம் 200 நிகழ்வுக்கு இந்திய பிரதிநிதிகளை அழைப்பதற்கான கோரிக்கையும் விடுக்கப்படும் என தெரியவருகின்றது.

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

மஸ்கெலியா சாமிமலை பகுதிகளிலுள்ள அனைத்து தோட்டங்களிலும் இளைஞர்களை இலக்கு வைத்து சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம்பெற்றுவருவதாக பெற்றோர் புகார் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து கருத்து தெரிவிக்கையில், கடந்த காலங்களில் இவ்வாறு கசிப்பு உற்பத்தி செய்யப்பட்ட இடங்களை தோட்ட மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து இல்லாமல் செய்தனர். தற்போது மீண்டும் கசிப்பு உற்பத்தி சாமிமலை கல்தோனி பகுதியில் இடம்பெற்றுவருகின்றது. இதனால் இளைஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை தடுத்து நிறுத்த வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர். பொலிஸ்மா அதிபர் முதல் அப்பகுதியிலுள்ள அனைத்து அதிகாரிகளின் கவனத்திற்கும் இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## மத்திய மாகாண கத்தோலிக்க சபைத் தலைவர்- ஆளுநர் இடையில் சந்திப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)



மத்திய மாகாண ஆளுநர் லலித் யூகமகே கண்டி கட்டுகஸ்தோட்டையில் அமைந்துள்ள மத்திய மாகாண கத்தோலிக்க சபை தலைவர் அதி.வண. வெலன்ஸ் மென்டிஸை சந்தித்து நேற்று கலந்துரையாடினார்.

சினேகபூர்வமாக இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அரசியல் கலாசார சமூக விடயங்கள் தொடர்பில் பல கலந்துரையாடப்பட்டதாக ஆளுநர் காரியாலயம் தெரிவிக்கின்றது.




கல்வி அமைச்சில் சமயம் தொடர்பான ஆலோசனை சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச்சபையின் உறுப்பினர்களாக மதகுருமார்கள், சமூக ஆர்வலர்கள், அரச அதிகாரிகள் எனப்பலரும் உள்வாங்கப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்டவர்களுக்கு நியமன கடிதங்களை வழங்கும் வைபவம் அண்மையில் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் ஆகியோர் நியமன கடிதங்களை வழங்கி வைத்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# தொடங்கஸ்லந்த நகரத்தை சர்வதேச சந்தையாக மாற்றும் திட்டம்

## ஐ.தே.க பிரதான அமைப்பாளர் ராஜபுத்திர வீரசிங்க

மாவத்தகம தினகரன் நிருபர்



தொடங்கஸ்லந்த தொகுதியின் வியாபார சமூகத்துக்கு சர்வதேச சந்தை தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்கு சீனா, வியட்நாம், இந்தியா போன்ற நாடுகளுக்கு ஆய்வு சுற்றுலாக்களை மேற்கொண்டு தொடங்கஸ்லந்த தொகுதியை அபிவிருத்தி செய்வதே தனது இலக்கு என தொடங்கஸ்லந்த ஐ.தே.க பிரதான அமைப்பாளர் தொழிலதிபர் ராஜபுத்திர வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தொடங்கஸ்லந்த தொகுதி ஐ.தே.க ஆதரவாளர்கள் கூட்டம் ஐ.தே.க பிரதித் தலைவர் அகில விராஜ் காரியவசம் தலைமையில் நடைபெற்றது.அக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் தொடர்ந்துரையாற்றிய அவர்,..

குருநாகல் மாவட்டத்தில் தொடம்கஸ்லந்த மிகவும் அபிவிருத்தியடைந்த நகரமாகும். ஜப்பானில் இருந்து 42% வாகனங்களை இலங்கைக்கு அனுப்பியது நான்தான். இலங்கையில் உள்ள அனைவரும் வாகனம் வாங்க மாவத்தகமவுக்கு வந்தனர்.அதிக வாகனங்களை உலகிற்கு ஏற்றுமதி செய்து சர்வதேச சான்றிதழை கூட நான் பெற்றுக் கொண்டேன்.

மாவத்தகம சந்தையில் வியாபாரம் செய்து பெற்ற அனுபவத்திலேயே இவை அனைத்தையும் செய்ய முடிந்தது. எனவே தொடங்கஸ்லந்தவில் இருந்து நாம் சர்வதேச சந்தையை வெல்லலாம். ஏற்றுமதி செய்யப்படும் வாசனை திரவியங்கள் இங்கு பயிடப்படுகின்றன.அதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கவுள்ளேன். இந்த பகுதியில் உள்ள தோட்டங்களுக்கு சென்றேன். அந்த பிள்ளைகளுக்கு திறமை இருக்கிறது. அந்த திறமையை நாம் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றார்.



எரிசக்தி மற்றும் சுற்றாடல் தொடர்பில் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அதிகாரசபையினால் நடத்தப்படும் ஊடகவியலாளர் பயிற்சி நெறியின் மூன்றாம் குழுவுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பு 3இல் அமைந்துள்ள மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஒரு வருடகால பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 12 ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் ரஞ்சித் சேபால தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



கடவத்தை யோக் சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில் பொசன் 'பக்தி கீத்த'பாடல் நிகழ்ச்சி பாடசாலையில் நடைபெற்றது.நிகழ்வுக்கு பிரபல சிங்கள் பாடகர் ஜகத் விக்கிரமசிங்க மற்றும் யோக் சர்வதேச பாடசாலை வலையமைப்பின் தலைவர் ரோசான் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். (படம் ரஞ்சித் அசங்க)

## மாத்தளை இந்து மஹா வித்தியாலய முன்னாள் அதிபர் காலமானார்

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை, இந்து மஹா வித்தியாலய முன்னாள் அதிபரும், மாத்தளை சஹிராக் கல்லூரி முன்னாள் ஆசிரியரும், cadet மாஸ்டர், இராணுவ லெப்டினன்ட் (volunteer force) ஆகிய பதவிகளை வகித்தவருமான குழந்தைவேல் (11) காலமானார். இவர் தனது நூறாவது பிறந்தநாளை அண்மையில் தனது சொந்த ஊரான மட்டக்களப்பில் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது. மாத்தளையில் கல்வி, விளையாட்டு உட்பட பல வகையிலும் இவரும் ஆசிரியையான இவரது மனைவியும் பல சேவைகளை ஆற்றியுள்ளனர். பூதவுடல் கொழும்பு, பொறளை ஏ. எப். மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகள் இன்று பொரளை கனத்தை பொது மயானத்தில் நடைபெறும்.

## கல்முனை வலய தமிழ்ப்பாட வளவாளராக ஜெஸ்மி எம்.மூஸா நியமனம்

கல்முனை மத்திய தினகரன்,
பெரியநீலாவணை விசேட நிருபர்கள்



கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் தமிழ்ப் பாட ஆசிரிய வளவாளராக ஜெஸ்மி எம்.மூஸா நியமிக்கப்பட்டுள்ளார். மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்புரையின் நிமித்தம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கமைய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விசேட துறையின் மேல் பிரிவில் பட்டம் பெற்ற இவர் தமிழ் முதுகலைமாணியை பூர்த்தி செய்து அதே பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்ட ஆய்வினையும் மேற்கொண்டு வருகின்றார்.

தமிழ் வினாவிடைப் பேழை, நாகம்மாள் ஒரு பார்வை, திருக்குறள் தெளிவுரை அடங்கலாக பாடத்திட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் வருகை தரு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ள இவர் தமிழ்த்துறை சார்ந்த சர்வதேச மாநாடுகள் பலவற்றில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள இவர் இலக்கிய விமர்சகராகவும் ஊடகவியலாளராவும் அறியப்பட்டவர்.

## பெண்களின் அறியப்படாத சக்தியைக் கண்டறிதல்

Queen of the World Sri Lanka



இலங்கையின் பெண்களின் வலிமை, அவர்களுள் ஒளிந்திருக்கும் ஆற்றல் கௌரவப்படுத்துவதற்காக Queen of the World நிகழ்வை 22.09.2023 கொழும்பிலுள்ள தாமரை தடாகத்தில் நடத்தவுள்ளது.இப்போட்டி நிகழ்வானது 17.09.2023 ஆரம்பமாகி 22.09.2023 வரை நடைபெறவுள்ளது. இலங்கையில் 52 வீதம் பெண்களாக காணப்படுகின்றனர்.

எனவே அவர்களது குரல்களும் பங்களிப்புகளும் உலக தளத்தில் அங்கீகரிக்கப்பட்டு கொண்டாடப்பட வேண்டும். இப் போட்டியின் போது பங்கேற்பாளர்கள் தமது மாறுபட்ட திறமைகளையும் பன்முக ஆளுமையையும் வெளிப்படுத்த முடியும். இப் போட்டியின் இறுதியில் ஒரு சராசரிப் பெண்ணைப் பிரதிபலிக்கும் நான்கு போட்டியாளர்கள் பெயரளவில் பட்டம் வெல்வார்கள். இவர்கள் அமெரிக்காவில் நடைபெறும் Queen of the World போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள்.

Miss Queen of the World இலங்கை (1829 திருமணமாகாதவர்) Ms. Queen of the World இலங்கை (3010திருமணமாகாதவர்) Mrs.Queen of the World இலங்கை (18 55 திருமணமானவர்) மற்றும் Elite Queen of the World இலங்கை (5510 திருமணமாகாதவர் அல்லது திருமணமானவர்) ஆகிய நான்கு வெவ்வேறு பட்டங்களை உள்ளடக்கியதாக இப் போட்டி நிகழ்வு அமையும்.

## ஊடகங்களை கட்டுப்படுத்தும்... (03 ஆம் பக்கத் தொடர்)

அதற்குப் பதிலளித்த அமைச்சர், நாட்டில் முன்னேற்றகரமான ஊடக கலாசாரமொன்றை கட்டியெழுப்புவதற்காக தேவையான ஒழுங்குபடுத் தலை ஏற்படுத்துவது அவசியம்.

அதற்கு முறையான விடயங்களை உள்ளடக்கி அதனைப் பின்பற்றியே மேற்படி சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள் ளார்.

## சப்ரகமுக மாகாண...

சப்ரகமுக மாகாண ஆளுநராக செயல்பட்ட டிகிரி கொப்பேகடுவ கடந்த இரு தினங்களுக்கு முன் தமது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இந்நிலையிலே,நிலவிய வெற்றிடத்திற்கே புதிய மாகாண ஆளுநராக நவீன் திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர், முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கவின் புதல்வரும் நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்து வருமாவார்.

## "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்"

கவிக்கமல், பாசில், ரஜினி இணைந்து வழங்கும் “அக்ஷரா” “வீனஸ்” இசைக்குழுவினர்களின் “இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக் கமல், பாசில், நித்தியகலா, கோபி, கீதா, சான், ஜெயமோகன், டாக்டர் ஜமீல் கலந்து சிறப்பிக்கும் “தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் ” இன்னிசை மாலை எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கொழும்பு 07 பொது நூலக மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. கல்வி






இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் விஷேட அதிதியாக கலந்து சிறப்பிக் கும் இந்த இசை நிகழ்வு புரவலர் ஹாசிம் ஒமரு முன்னிலையில் நடை பெறும். சமூகசேவையாளர் சாஜஹா னின் தலைமையில் நடைபெற இருக் கும் இந்நிகழ்வில் திரைப்பட நடிகர் DISCO RAJA எம். எப் .நப்சர் பிரதம அதிதியாகக் கலந்து நிகழ்வினைச் சிறப்பிக்க இருக்கின்றார். கொழும்பு நகரசபை முன்னாள் உறுப்பினர் ஏ. ஜோசப் பெர்னான்டோ, முன்னிலை அதிதியாக சிறப்பிக்கும் இந்நிகழ்வில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரி யர் தே.செந்தில்வேலவர் கௌரவ அதி தியாக கலந்து கொள்கிறார். கொழும்பு பிரதிமேயர் எம் ரி எம் இக்பால் விசேட அதிதியாக கலந்து கொள்கிறார்.

இந் நிகழ்ச்சிக்கான ஊடக அனுச ரணை வசந்தம் எப். எம். தினகரன் பத் திரிகை, மொஹபத் tv , அக்ஷரா தமிழ் வழங்குகின்றன.

## தமிழ் பௌத்த...

எம்பி தெரிவித்துள்ளார். இலங்கையின் வரலாற்றில் தமிழ் பௌத்த வரலாற்றுக்கு உரிய இடத்தை வழங்கினால், நாம் எதிர்கொள்ளும் அநேக பிரச்சினைகளுக்குரிய தீர்வுச் சாவியாகுமெனவும் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

தமிழராக கட்சியினருடனான கலந்துரையாடலில், தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத் துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க சில பணிப்புரைகளை விடுத் துள்ளார். இதன்போது இலங்கை தீவின்“தமிழ் பௌத்த வரலாற்றை” பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்க கருத்து கூறியுள்ளார்.

இப்படி ஒரு தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை சிங்கள கடும் போக்கர்கள் எப்போதும் மறைக்க விரும்புகிறார்கள். விஜயன் வந்து இறங்கியதை பொய்யென, ஞானசார தேரர் என்னைத் தேடி வந்து சொன்னார்.இளவரசன் விஜயன் வரவை நினைவுகூர்ந்து, இலங்கை அஞ்சல் திணைக்களம் முத்திரை வெளியிட்டது. பின்னர் அதை இரண்டு வருடங்களில் வாபஸ் பெற்றது. இவையெல் லாம், வெறும் கைகளால் சூரியனை மறைப்பதை போன்றுள்ளது.இது போலவே,

வரலாற்றில் தமிழர்களுக்கு உரிய இடத்தை இவர்கள் எப்போதும் மறைக்கவே முயல்கின்றனர்.

தமிழ் பௌத்த வரலாறு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட் டால், இன்று நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் என்ற பூட்டுக்கு, அது சாவியாக அமையுமென நான் நம்புகிறேன். இந்நோக்கில், 2018ஆம் வருடம் நான் அமைச் சராக இருந்த போது ஒரு காரியம் செய்தேன்.

பிரபல சிங்கள வரலாற்றாசிரியர், சினிமா எழுத்தாளர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, இலங்கையின் தமிழ் பௌத்த வரலாற்றை பற்றி சான்றுகளுடன் எழுதிய, “தமிழ் பௌத்தர்கள்” (தமிழ பௌத்தயா) சிங்கள நூல் நாட்டில் பாவனையில் இல்லாமலிருந்தது. அந்த நூலை தேடி பிடித்து, பேராசிரியரின் அனுமதியை பெற்று அதை எனது அமைச்சின் செலவில் மறுபிரசுரம் செய்து, நாட்டின் சிங்கள பாடசாலைகளுக் கும், விகாரைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

அதன்பின் பேராசிரியர் ஆரியரத் னவை அழைத்து சில பிக்குகள் கண்டித்ததாக அறிந்தேன். என்னு டன் முரண்பட எவரும் வரவில்லை.

## ஊடக நெறிமுறைகளை...

லையென, ஜனாதிபதியின் பாரா ளுமன்ற விவகாரங்களுக்கான ஆலோசகர் கலாநிதி ஆஷு மார சிங்க தெரிவித்துள்ளார். கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மையகமான சிறிகொத்தாவில் (12) ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது. இதில் கருத்து தெரி விக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகை யில், ஊடக நெறிகளை மீறுவோரே இந்த சட்டங்கள் குறித்து அச்சப்பட வேண்டும். தற்போதுள்ள சட்டங்க ளின் பிரகாரம் எந்தவொரு ஊடக நிறு வனத்தின் அனுமதிப் பத்திரத்தையும் இரத்துச் செய்யும் அதிகாரம் ஊடக அமைச்சருக்கு உண்டு. ஆனால், அவ்வாறு ஒருபோதும் அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட வில்லை. சமூக ஊடகங்கள் தொடர் பிலும் கடுமையான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். சமூக ஊடகங்களில் கணக்கு ஒன்றை ஆரம்பித்த உடன், விரும்பியவாறு கருத்துக்களை வெளியிடும் செயற் பாடு கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

## மக்கள் நலத் திட்டங்கள்...

கௌதாரிமுனை காற்றாலை திட் டத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையா டல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கடற் றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இங்கு கருத்து தெரி வித்த அமைச்சர்:

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதி காரிகளால் கடந்த காலங்களிலும், இன்றைய சந்திப்பிலும்

முன்வைக்கப்பட்ட ஆலோசனை கள் கருத்திலெடுக்கப்பட்டு, மக்க ளின் நன்மைகளுக்கு முன்னிரிமைய ளிக்கப்படும். இந்தியாவை சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றின் முதலீட் டில் பூநகரி, கௌதாரிமுனையில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள காற்றாலைத் திட்டத்தின் காரணமாக கௌதாரிமுனை பிரதேசத்தினை சேர்ந்த மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகவும் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். இதனால், சமூக மற்றும் வாழ்வா தார நன்மைகளையும் இம்மக்கள் பெறுவர். இதற்கு இந்திய முதலீட் டாளர்களா ல் உத்தரவாதம் அளிக் கப்பட்டுள்ளது. குறிப்பாக கௌதா ரிமுனை கிராமத்திற்கான சுமார் 17 கிலோமீற்றர் வீதி காபபெற் வீதியாக அமைக்கப்படும். இங்கு, சுமார் 40 கிலோமீற்றர் நீளமான உள்ளக வீதிக ளும் உருவாக்கப்படவுள்ளன.

அதேபோன்று, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்கள் உத்தவரவாதம் அளித்துள்ளதாகவும் அமைச்சர் தெரி வித்தார்.

## உற்பத்திகள்....

ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச் சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இவர்களுக்கான நட்ட ஈடு விரைவில் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரி வித்துள்ளார். அதேவேளை, ட்ரோன் தொழில்நுட்பத்தை உபயோகித்து நெல் வயல்களுக்கு கிருமி நாசினி தெளிக்கும் நடவடிக்கைகள் வெற்றிக ரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அமைச்சர், இத்தொ ழில்நுட்பத்தின் உபயோகத்துடன் நாட ளாவிய ரீதியில் 900 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு சேவைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.

நெல், சோளம், தென்னை, முந் திரிகை, கரும்பு உள்ளிட்ட ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கும் அனைத்து நோய்களுக்குமான கிருமிநாசினி மேற்படி ட்ரோன் தொழில்நுட்பம் மூலம் தெளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பெருமளவு கிருமிநாசி னியை மீதப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரண்டு வாரங்களில்...

அத்துடன் 2200 தாதிமார்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக் கைகளை முன்னெடுத்து, அடுத்த மாதம் நியமனம் வழங்கப்படு மென்றும் அமைச்சர் தெரிவித்துள் ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தி யாளர் மாநாட்டில், இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,புதிய டாக்டர்கள் 406 பேர் எதிர்வரும் (27) முன்பதாக நியமிக்கப்படுவர். இவர் கள் உடனடியாக ஆசிரியர் ஆஸ் பத்திரிகளில் இணைத்துக் கொள் ளப்படுவர். அதேபோன்று குடும்ப சுகாதார சேவை பிரிவுக்காக 222 பேருக்கு கடந்த வாரம் நியமனம் வழங்கப்பட்டது. இதனால், நில விலய தட்டுப்பாடு ஓரளவு நிவர்த் திக்கப்பட்டது.அத்தோடு மேலும் 600 பேருக்கு பயிற்சிகளை வழங்கி அவர்களை,இணைத்துக்கொள்ள விரைவான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும்,விரைவில் 2,200 தாதிய ருக்கு நியமனங்களை வழங்க முன் னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

இந்நியமனங்கள் எதிர்வரும் ஒன்றரை மாத காலத்திற்குள் வழங் குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட வேண்டிய உபகர ணங்களைத் திருத்துவதற்காக 4 பில் லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் சில குறிப்பிடத்தக்க பின்னடைவுகளை சந்தித்தாலும், எதிர்காலத்தில் சிறந்த முன்னேற்றங் களை எதிர்பார்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.அதேவேளை, மருந்துகளின் விலைகள் தொடர் பில் குறிப்பிட்ட அமைச்சர், நாளை முதல் மருந்துகளின் விலைகளை 16 வீதத்தால் குறைப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத் துடன், ஒவ்வொரு மூன்று மாதங் களுக்குமிடையில் மருந்துகளின் விலைகளை மீளாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில்...

காணிகளே, இவ்வாறு விடுவிக் கப்பட்டதாக இராணுவம் அறிவித் துள்ளது.

கிழக்கு மாகாண இராணுவ கட் டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.கே.ஆர்.கே ஹெட்டியாரச்சி, காணிகளை மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கலைமதி பத்மராஜாவி டம் உரிய முறையில் கையளித்துள் ளார்.

இராணுவத்தினரால் விடுவிக்கப் பட்டுள்ள காணி சுமார் 8.6 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இவை, 56 தனி நபர்களுக்குரியது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

உரிமையாளர்கள் தொடர்பான தகவல்கள் உறுதிப்படுத்த ப்பட்ட பின்னர் அவர்களிடம் காணிகளை ஒப்படைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

## யுத்தத்தை முடிவுக்கு....

வில்லையெனவும் கட்சியன் பொதுச் செயலாளர் சாகர காரியவ சம் எம்.பி தெரிவித்துள்ளார்.

வெகுவிரைவில் தேர்தல் ஒன்று நடைபெறும். ராஜபக்ஷக்கள் தலை மையிலான அரசாங்கம் தோற்றம் பெறுமெனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அடிமட்ட மக்கள் ஆதரவுடன் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 2016 ஆம் ஆண்டு உதயமானது. நல் லாட்சி அரசாங்கத்தின் கடும் எதிர்ப் புக்கு மத்தியில் 2028 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஜனா திபதி தேர்தல், பொதுத் தேர்தல் என தொடர்ந்து மக்களாணையை இக் கட்சி உறுதிப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

## சிறுபான்மைச்...

சிறுபான்மை சமூகங்களின் பிரச்சி னைகளை நிவர்த்திப்பதற்கு ஜனாதிபதி முனைப்புடன் செயற்படுவதை,நான் அறிவேன். இழக்கப்பட்ட முஸ்லிம் களின் காணிகளை மீளப்பெறவும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பிரச்சினைகள் குறித்தும் பொதுவான வரைபை தயாரிக்க வேண்டியுள்ளது. வடக்கு, கிழக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர்பறிபோன முஸ்லிம்களின் பூர்வீக நிலங்களை மீளப்பெற வேண்டியும் உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 வீத முஸ்லிம்கள் வாழ்கின்ற நிலையில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேச செயலகங்களில் 1.3 வீத காணிகளே வழங்கப்பட்டுள்ளன. அம்பாறை, திருகோணமலை மற்றும் வடக்கின் ஏனைய பகுதிகளிலும் இதே நிலைமையே காணப்படுகிறது.

எல்லை நிர்ணய அறிக்கையில் சந்தேகங்கள், பாரிய ஆபத்துகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமூ கத்தின் சமகால சவால்கள் தொடர் பில் சமூக பிரதிநிதிகளிடம் ஒரு மித்த கருத்து நிலவுவது அவசியம்.

கருத்தொற்றுமையுடனும் போதிய ஆவணங்களுடனும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஜனாதி பதியைச் சந்திப்பதற்காக சகல முஸ்லிம் தலைமைகளும் எம்பிக் களும் தங்களது அரசியல் பேதங் களைப் புறந்தள்ளி ஒன்றுபடல் அவசியம். ஒரே தாய்மொழியின ராகிய தமிழரும் முஸ்லிம்களும் தொடர்ந்தும் பிணக்குகளுக்குள் சிக்கியிருப்பது சிறுபான்மை சமூ கங்களை ஈடேற்றாது. என்றும் அவரது அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## நாட்டை கட்டியெழுப்ப....

இவை, எல்லாவற்றுக்குமுரிய பொதுப் புள்ளி அறிவாகுமெனவும், இந்த அறிவை அடிப்படையாக் கொண்டு செயல்பாடுகளை ஒழுங்க மைத்தால் வெற்றிகரமான இலக்கு களை எட்டலாம் எனவும்,

அவர் குறிப்பிட்டார்.மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசின் ஜனன தினம் ஜூன் (23) கொண்டா டப்பட உள்ளது.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் சஜித்பிரேமதாசா தெரிவித்துள்ள தாவது:

நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை அடையும் யுகம் உருவா காமல் தடுப்பதே

இந்தத் திட்டங்களின் நோக்கம்.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பிறந்த தினம் இம் மாதம் (23) கொண்டாடப்படவுள் ளது. இதையிட்டு, நாடு பூராக வும்,கல்வி,சுகாதாரம் அபிவிருத்தி போன்ற பல்வேறு திட்டங்களை நடைமுறைப்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக நேற்று (13) அம்பாறை பண்டாரநாயக்க மகளிர் கல்லூரிக்கு 50 இலட்சம் பெறுமதி யான பஸ்சொன்றை வழங்கியதா கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்கட்சியிலிருந்தாலும், நாட்டை அறிவுள்ள நாடாக மாற் றுவதற்கான அடிப்படை அடித் தளத்தை ஐக்கிய மக்கள் சக்தி அமைத்து வருவதாகவும் எதிர்க்கட் சித் தலைவர் தெரிவித்தார்.

## போலி கச்சேரி....

அதற்கிணங்க பாணந்துறை பரன்ன வீதியை வசிப்பிடமாகக் கொண்ட 65 வயதுடைய ஒருவரே,

கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் பாணந்துறை நகரசபை மற்றும் மொரட்டுவ மாநகரசபை ஆகியவற் றில் பணிபுரிந்துள்ளதாக தெரிய வருகிறது.

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்ப டையில் மேற்படி பொலிஸ் நிலை யத்தின் பொறுப்பதிகாரி சஞ்ஜீவ லக்மாலின் தலைமையில் இச்சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பத்து தினங்கள், இதற்கான நடவ டிக்கைகளை முன்னெடுத்து நேற்று அதிகாலையே சுற்றிவளைப்பை முடிவுக்குக் கொண்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.சந்தேக நபரிடமிருந்து 31 உத்தியோகபூர்வ முத்திரைகள் (சீல்) கைப்பற்றப்பட் டன. களுத்துறை மாவட்ட பிரதேச செயலாளர், பிரதேச சபை செயலா ளர் காணி பதிவாளர்கள், வருமான வரி பரிசோதகர்கள், பாடசாலை அதி பர்கள் உள்ளிட்டவர்களின் உத்தி யோகபூர்வ முத்திரைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

## 159 வருடங்களின்...

2003 – 09ஆம் இலக்க நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகார சபை சட்டத்தின் நியதிகளை நடை முறைப்படுத்தப்படும் போது, அந்த கட்டளைச் சட்டத்தில் சில நியதி கள் சிக்கலுக்குள்ளாகின. இதைய டுத்தே, இந்த கட்டளைச் சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத் துவது பொருத்தமில்லை எனத் தீர் மானிக்கப்பட்டது. இதன்படி இக்கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்டமூலம் தயாரிக் கப்படவுள்ளது.

இதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கு வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச் சரினால் அமைச்சரவையில் சமர்ப் பிக்கப்பட்டுள்ள பத்திரத்துக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது.

## நாட்டில்...

– செட்டியார் தெரு நிலவரங்களின் படி, தங்கத்தின் விலை நேற்று முன் தினத்துடன் (12) ஒப்பிடுகையில் நேற்று (13) சற்று அதிகரித்துள்ளது.

கடந்த சில நாட்களாக தங்கத்தின் விலை தொடர்ச்சியாக குறைந்து வருகிறது.இந்நிலையில், கடந்த இரு தினங்களாக ஆபரண தங்கத் தின் விலையில் அதிகரிப்பு பதி வாகியுள்ளது. 24 கரட் 01 கிராம் – ரூ.20,790.00, 24 கரட் 08 கிராம் (01 பவுண்) – ரூ.166,300.00, 22 காரட் 01 கிராம் – ரூ.19,060.00, 22 கரட் 08 கிராம் (01 பவுண்) – ரூ.152,500.00, 21 கரட் 01 கிராம் – ரூ.18,200.00, 21 கரட் 08 கிராம் (01 பவுண்) – ரூ.145,550.00 ஆக பதிவா கியுள்ளது.

## தேசிய பாதுகாப்புக்கு....

சுட்டிக்காட்டிய பேராசிரியர் ரொஹான் சமரஜீவ, 'தேசிய பாதுகாப்பு என்ற சொல்லை அவர்கள் போராட் டத்திற்கான தொனிப்பொருளாக மாற்றிக் கொண்டுள்ள தாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்படும் '101கதா' கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்ட போதே, இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத் தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துறைசார் நிபுணர்களிடத்தில் ஆலோசிக்காமல் இவ்வாறானதொரு அறிக்கையைத் தயாரித்துள்ளமை, துறைசார் மேற்பார்வைக் குழுவின் நியதிகளுக்கு புறம்பா னதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த பேராசிரி யர் ரொஹான் சமரஜீவ குறிப்பிட்டதாவது:

"நிகழ்காலம் பற்றிய தெரிவு மற்றும் எதிர்காலம் பற்றிய நோக்கு என்பவை இல்லாமையே இவ்வாறான பிரச்சினைகளுக்கு முதன்மைக் காரணம். 1990 களில் பல்வேறு நிறுவனங்களுக்கும் இங்கு முதலிட அழைப்பு விடுக்கப்பட்டது. அன்று டெலிகொம் நிறுவனத்திடம் தொலைத்தொடர்பு வலையமைப்பொன்று இருக்க வில்லை.

மொபிடெல் நிறுவனத்தில் பங்கு இருந்தாலும் முகா மைத்துவம் செய்யும் அதிகாரம் அவுஸ்திரேலிய நிறு வனத்திடமே காணப்பட்டது. டெலிகொம் நிறுவனத் திற்கு சொந்தமான நிறுவனம் என்பதால் அரசாங்கம் மொபிடெல் நிறுவனத்திமிருந்து சேவையை பெற்றுக் கொண்டது. இருப்பினும் மொபிடெல் நிறுவனத்தின் முகாமைத்துவ உரிமம் டெல்ஸ்டா நிறுவனத்திடமே காணப்பட்டது. டெலிகொம் முகாமைத்துவ உரிமம் ஜப்பான் நிறுவனத்திடம் காணப்பட்டது. அதனால், டொலிகொம் நிறுவனத்தின் தலைவராக இலங்கையர் கள் இருந்தபோதிலும், ஜப்பானிய பிரதம நிறைவேற்று அதிகாரிகளாலேயே முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

யுத்த காலத்திலும் 04 கையடக்க தொலைபேசி வலை யமைப்பு நிறுவனங்களும் 3 நிலையான தொலைபேசி இணைப்பு நிறுவனங்களும் காணப்பட்டன. அவற்றில் டயலொக் நிறுனத்தில் மாத்திரமே இலங்கையர் ஒருவர் பிரதம நிறைவேற்று அதிகாரியாகக் காணப்பட்டார். இருப்பினும் அந்நிறுவனம் முழுமையாக மலேசியா விற்கு சொந்தமாக இருந்தது. இவ்வாறிருக்க சிலர் தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தை மந்திரம் போல சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

டெலிகொம் நிறுவனத்தின் உரிமத்தை அரசாங் கம் முழுமையாக கொண்டிருந்த போது கொழும்பு லோட்டஸ் வீதியில் காணப்பட்ட தலைமையகத்திலி ருந்தே, அனைத்து சர்வதேச அழைப்புக்களும் பரிமாற் றப்பட்டன. அந்த செயன்முறைக்கு பாதிப்பு ஏற்பட் டிருந்தால் இலங்கை சர்வதேச நாடுகளிடத்திலிருந்து விலகியிருக்க வேண்டிய நிலைமை உருவாகியிருக்கும். வயர் மற்றும் மென்பொருட்கள் கட்டமைப்பில் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் முழு வலையமைப்பும் முடங்கிவி டும். மென்பொருள் கட்டமைப்புக்கு மாற்று முறைமைக ளும் காணப்படவில்லை.

டெலிகொம் நிறுவனத்தை அரசாங்கம் நிர்வகித்த போது கூட, தேசிய பாதுகாப்புக்கு இவ்வாறான சவால் காணப்பட்டது. அக்காலத்தில் புலிகள் அமைப்பினால் இரு தடவை தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. தனியார் மயப்படுத்தப்பட்ட பின்னர் மாற்று முறைமை களை பின்பற்றுமாறு ஜப்பான் நிறுவனத்திடம் நாம் அறிவுறுத்தியிருந்தோம். அவர்களும் உடனடியாக புதிய முதலீடுகளுடன் புதிய இடமொன்றில் மாற்று முறை மையொன்றை நிறுவினர். டெலிகொம் நிறுவனம் முழு மையாக அரசாங்கத்தின் வசமாக காணப்பட்ட போதும் ஆட்சியாளர்கள் நிறுவனத்தின் பாதுகாப்பை பொருட்ப டுத்தவில்லை. இருப்பினும் நாம் பாதுகாப்பற்ற இடம் எதுவென அறிந்துகொண்டதன் காரணமாகவே தகவல் களை சேமிக்கும் கட்டமைப்பொன்றை மாற்று இடத்தில் நிறுவினோம்.

அரச நிறுவனத்தால் செய்ய முடியாத ஒன்றை, ஜப் பானிய நிறுவனம் செய்தது. பெரும்பாலான அரச நிறு வனங்கள் உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பைக் கவனிப்பதில்லை. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்க ளில் முதலீடு செய்யவும் முடியாது. பணமும் இல்லை. இவை சில மேற்பார்வைகளுடனேயே தனியார்மயப்ப டுத்தப்படுகின்றன. மேலும், நாம் சொல்வதை அவர்கள் கேட்க வேண்டும். உதாரணமாக, அன்று டெலிகொம் மற்றும் ஜப்பானிய நிறுவனம் செய்த தவறு காரணமாக, ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டத்தை அனுப விக்க வேண்டியேற்பட்டது. அது சட்டப்படி அபராதமாக இல்லாத போதிலும், அந்தத் தொகையை வாடிக்கையா ளருக்குத் திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட் டது.

1990 ஆம் ஆண்டுகளில் எமது ஆட்சியின் போது, சர்வதேச அழைப்புகளில் ஏகபோக உரிமை இருந்தது. இன்று, சர்வதேச இணைப்புகள் டெலிகொம் ஊடாக மேற்கொள்ளப்படுவதில்லை. டெலிகொம் நிறுவனத் திற்கு ஒரேயொரு கேபிள் நிலையமே உள்ளது. இன்று, ஏனைய நிறுவனங்களிலிருந்தும் இணைய இணைப்பு களைப் பெற முடியும். அரசாங்கம் இன்று டெலிகொம் மின் இணைய இணைப்பை மாத்திரமா பயன்படுத்து கிறது? அது தொடர்பில் அறிந்து கொள்ளாமல் தேசிய பாதுகாப்பு குறித்து மந்திரம் போல் கூறித்திரிகிறார்கள்.

இன்று பெரும்பாலான அரசாங்கத் தகவல்கள் ஜிமெயில் மூலம் பரிமாறப்படுகின்றன. ஜிமெயில் வெளி நாடுகளுக்குச் சொந்தமானது. அரசியல்வாதிகள் மற்றும் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் பெரும்பாலானோர் வட்ஸ்அப் மூலம் அழைப்புகளை மேற்கொள்கின்றனர். வட்ஸ்அப் யாருக்குச் சொந்தமானது? வட்ஸ்அப் மூலம் பரிமாறப்படும் தகவல்கள் வெளிநாடுகளில் சேமிக் கப்படுகின்றன. எனவே, டெலிகொம் நிறுவனமாக, இருந்தாலும் அல்லது தனியார் நிறுவனங்களாக இருந் தாலும் அவர்களிடமிருந்து இணைய இணைப்புகளை பெற்றுக்கொள்வதால் அந்த நிறுவனங்களுக்குத் தரவுகள் செல்லாது. மேலும், இவை அனைத்தும் ஏனையவர்கள் அவற்றை அணுக முடியாதவாறு கடவுச்சொற்கள் மற்றும் பிற முறைகளால் பாதுகாக்கப்பட்டுள்ளன. எனவே, டெலிகொம் நிறுவனம் தனியார்மயமாக்கப்பட்டால், அரச தகவல்கள் வெளியே செல்லும் என்று கூறுவது ஒரு பெரிய மாயையாகும்.

இலங்கையில் இரண்டு தரவு மையங்கள் உள்ளன. டெலிகொம் நிறுவனத்திற்கு ஒன்று. மற்றொன்று டயலொக் நிறுவனத்துக்கு உரியது. இவை அரசாங்கத்தின் தகவல்களைச் சேமிப்பதற்காக வாடகைக்கு எடுக்கப்பட் டுள்ளன. ஒரு வங்கியில் பாதுகாப்பான வைப்புப் பெட்டி யின் ஒரு பகுதியை வாடகைக்கு எடுப்பது போல. அந்த வைப்புப் பெட்டி யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கின் றது? குறித்த வங்கியிடமா? இல்லை. அந்தப் பெட்டியை வாடகைக்கு எடுத்தவரிடமே அதன் திறப்பு உள்ளது.

அவ்வாறே, அரசாங்கத் தரவுத்தளங்களை சம்பந்தப் பட்ட அதிகாரி மட்டுமே அணுக முடியும். இது சர்வதேச முறையாகும். கோப்பு என்பது ஒரு பழைய எண்ணமா கும். இப்போது தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்கு வெளியே ஒரு பிரதியை வைத்திருப்பதன் மூலம் பாதுகாப்பை உறுதிப் படுத்த முடியும். ஆனால் எம்மால் மட்டுமே அவற்றை அணுக முடியும்.

அரசியல்வாதிகளின் சகோதரர்கள், உறவினர்களும் அரச நிறுவனங்களில் நியமிக்கப்படுகிறார்கள். அதன் பிறகுதான் முறைகேடு நடக்கிறது. பொதுவாக, ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவில் அறிவுஞானமுள்ள வர்கள் இருக்க வேண்டும். ஏனைய நாடுகளில் அவற்றை எவ்வாறு செய்கின்றார்கள் என்பதை நாம் கண்டறிய வேண்டும். இது வெறும் எண்ணங்களின் அடிப்படை யில் மாத்திரமே தயாரிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தில் இவ்வாறானதொரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள் ளமை வருத்தமளிக்கிறது.

நிபுணத்துவம் பெற்றவர்களிடம் இருந்து தகவல் களை எடுத்து அறிக்கையை தயாரித்திருக்கலாம். ஆனால் இந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் கொள்கை ளுக்கு மாற்றமாகவே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள் ளது".இவ்வாறு பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தெரிவித் தார்.

## கிழக்கில் இனநல்லுறவு... (4ம் பக்க தொடர்)

அதனை மிகத் தெளிவாக சரியான தரவுகளுடன் வழங்கும் போதுதான் அவர் அதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள முடியும். இல்லாவிடின் வழமைபோல் ஆளுநர்கள் வருவதும் போவதுமாகவே இருப்பதுடன் பிரச்சினைகள் தலைமுறைகளுக்கு கடத்தப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிடும் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்திற்கு ஆளுநரா செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டதையிட்டு பலரும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் பலரும் தத்தமது கருத்துகளை பதிவு செய்திருந்தனர். அநேகமான கருத்துக்கள் அரச அலுவலர்கள், ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு நியமனம் செய்யப்படுகின்ற விடயத்தினை முன்னுரிமைப்படுத்தியிருந்தது. அத்துடன் கிழக்கு மாகாண உயர் அதிகாரிகள் நியமனத்தில் மாகாண சனத்தொகை விகிதாரசாரத்தினை கவனத்திற் கொள்ளுமாறும் இங்கு கேட்டுக் கொண்டிருந்தனர்.

கரையோர ரயில் சேவைவை இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அம்பாறை, அம்பாந்தோட்டை வரை விஸ்தரிப்பதற்கான வாய்ப்பு இந்த ஆளுநருக்கு இருப்பதாகவும், அதனை முன்னெடுக்குமாறும் அவர்கள் கோரியிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரை மூன்று மாகாணங்கள் காணப்படுகின்றன. இதில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அரச அலுவலர்கள், ஆசிரியர்கள் எவரும் அம்பாறை அல்லது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நியமிப்போ, இடமாற்றமோ செய்யப்படுவதில்லை. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளவர்கள் அம்பாறை, திருகோணமலைக்கோ நியமிப்பு, இடமாற்றம் செய்யப்படுவதில்லை. ஆனால் அம்பாறை மாவட்டத்திலுள்ளவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலைக்கு நியமனம், இடமாற்றம் செய்யப்படுகின்றனர். கடந்த ஆளுநரை இந்த உத்தியோகத்தர்கள் சந்தித்திருந்தும் சாதகமான நிலை எட்டப்படவில்லை. இவர்களின் மாதச் சம்பளம் உணவு, தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் கரைந்து விடுகின்றது.

தொழில் புரிதல் வாழ்வதற்கே. இங்குள்ளவர்கள் தங்களை வதைத்தே தொழில் புரிகின்றனர். எனவே இவற்றுக்கும் பொருத்தமான நடவடிக்கைகளை ஆளுநர் எடுப்பதானது இன்றுள்ள நிலையில் அரச அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு பெரியதொரு அறுதலாக அமையும்.

மேலும், ஆளுநர் தனது உரையில், இனங்களுக்கு இடையிலான இனநல்லுறவை வலுப்படுத்துதல் பற்றி வலியுறுத்தியிருந்தார். அநேகமான பிரச்சினைகளுக்கு காரணம் புரிதல்களில் ஏற்படுகின்ற குழப்ப நிலை மற்றும் இன்னொருவர் மீது அதிகாரம் செலுத்த முற்படுவதான நிலைகளேயாகும். இங்குள்ள நான்கு மதத்தலைவர்களையும் அழைத்து கூறிய விடயத்தை அவர் தெளிவுபடுத்தியிருந்தார். மதங்களில் தலையீடுகள் இல்லாது இருக்கின்ற போதே இனநல்லிணக்கம் ஏற்படும் என்றார் ஆளுநர். இனநல்லிணக்கத்திற்காகவும் அர்ப்பணிப்புச் செய்யவேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்திற்கு நியமிப்புச் செய்யப்பட்ட ஆளுநர்களில் ஊடகவிலயலாளர்களை சிநேகபூர்வமாக சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்த ஒரு ஆளுநராக செந்தில் தொண்டமானையே இங்குள்ள ஊடகவியலாளர்கள் காண்கின்றனர். இதனை இங்கு கலந்து கொண்ட ஊடகவிலயாளர் வசந்த சந்ரபால நினைவுபடுத்தியிருந்தார். இதற்காக ஆளுநருக்கு நன்றியை தெரிவிப்பதாகவும் வசந்த சந்ரபால குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலநிலை சீரமைவு நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் மூலம் 559 மில்லியன் ரூபா செலவில் ஹம்பாந்தோட்டை யோதகண்டிய விவசாய சேவை மத்திய நிலைய நிர்வாகப் பகுதியில் காவன் திஸ்ஸபுர மற்றும் ஜுல்பல்லம கிராமங்கள் முன்மாதிரி விவசாய கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர திட்டத்திற்கான பெயர்ப் பலகையை திறந்து வைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைப்பதை படங்களில் காணலாம்.

# இந்திரா காந்தியை இழிவுபடுத்திய கனடிய காலிஸ்தான் ஊர்வலம்

## கனடிய எம்.பி. கடும் கண்டனம்

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் கொலையை நியாயப்படுத்தும் வகையிலும் அவரைச் சுட்டுக் கொன்ற சீக்கிய மெய்ப் பாதுகாவலர்களை மகிமைப்படுத்தும் வகையிலும் சமீபத்தில் கனடா பிரம்டன் நகரில் நடைபெற்ற காலிஸ்தான் ஆதரவாளர்களின் பேரணியை ஆளும் லிபரல் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சந்திரா ஆர்யா கண்டித்துள்ளார்.

'காலிஸ்தான் ஆதரவாளர்கள் மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொண்டுள்ளனர். எமது கனடாவின் கருத்து இதுவல்ல. வன்முறையை மகிமைப்படுத்துவதும் வெறுப்புணர்வை பகிரங்கமாக வெளிப்படுத்துவது கனடாவின் உறுதிப்பாடுகளுக்கு முற்றிலும் எதிரானது. காலிஸ்தான் தீவிரவாதிகள் கனடாவின் அந்த சிவப்புக் கோட்டைத் தாண்டி விட்டதாகவே நான் கருதுகிறேன். இது கனடிய அரசு பதில் சொல்ல வேண்டிய தருணம்' என அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காலிஸ்தான் ஆதரவாளர்கள் நாம் நடத்திய ஊர்வலத்தில் வெள்ளை சேலை அணிந்த இந்திரா காந்தியின் படத்தை எடுத்துச் சென்றனர். அவரின் புடவை இரத்தம் தோய்ந்ததாகவும் அவரைச் சுட்ட சீக்கியர்கள் அவரை நோக்கி குறிபார்ப்பதாகவும் அந்த உருவங்கள் அமைந்திருந்தன.

இந்த ஊர்வலத்துக்கு இந்தியாவில் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தீவிரவாதிகளுக்கும் பிரிவினைவாதிகளுக்கும் இடமளிப்பது இருதரப்பு உறவுகளுக்கு மட்டுமின்றி கனடாவின் நற்பெயருக்கும் நல்லதல்ல என்று தெரிவித்திருந்தார்.

## 900 கோடி ஆயுத ஏற்றுமதி

## மோடி ஆட்சியில் 16 ஆயிரம் கோடி

### இந்திய பாதுகாப்பு அமைச்சர்

உலகின் மிக மோசமான தருணங்களில் பிரதமர் மோடி சமயோசிதமான செயல்பட்டு இந்திய நலன்களை பாதுகாத்தார் என்றும் 2014ஆம் ஆண்டு முதல் பத்து பொருளாதார வளர்ச்சி கண்ட நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்த இந்தியாவை முதல் ஐந்து நாடுகளில் ஒன்றாக மோடி மாற்றி அமைந்துள்ளார் என்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் பிரதமரை புகழ்ந்துரைத்துள்ளார்.

பீஹாரின் ரொதாஸ் மாவட்டத்தின் கோபால் நாராயன்சிங் தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அறிஞர் ஒன்று கூடலில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், இந்தியாவுக்கு தேவையான ஆயுத தளபாடங்களில் பெரும்பாலானவை உள்ளூரிலேயே தயாரிக்கப்படுவதால் இறக்குமதி குறைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டதோடு 900 கோடியாகக் காணப்பட்ட இந்தியாவின் ஆயுத ஏற்றுமதி தற்போது வருடத்துக்கு 16 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மோடி உறுதியளித்தபடியே இந்திய அரசியல் சட்டத்தின் 370ஆவது பிரிவு நீக்கப்பட்டு இந்தியாவோடு காஷ்மீர் இணைக்கப்பட்டமை மற்றும் அயோத்தி ராமர் கோவில் கட்டப்படுகின்றமை என்பன உறுதி மொழிகளுக்கும் அவற்றின் செயற்பாடுகளுக்கும் இடையே இடைவெளி கிடையாது என்பதையே காட்டுகிறது.

பாகிஸ்தான் மீதான 'சர்ஜிகல்' தாக்குதல், பாலகோட் தாக்குதல் என்பன மீதான இறுதி முடிவை, மிகச்சிலர் கலந்து கொண்ட அவசரக் கூட்டமொன்றில் ஒரு பத்துநிமிட நேரத்தில் மோடி எடுத்தார் என்பதை பெருமிதத்துடன் குறிப்பிட்ட ராஜ்நாத்சிங், உக்ரேனில் சிக்கிய இந்திய மாணவர்களை, ரஷ்ய, உக்ரேனிய மற்றும் அமெரிக்க அதிபர்களுடன் பேசி ஒழுங்கு செய்த நான்கு மணித்தியாலய யுத்த நிறுத்தத்தில் மோடியால் மீட்க முடிந்தது என்றும் கொவிட் தொற்றின்போதும் வெளி நாடுகளில் வசித்த இந்தியர்களை அவரால் அழைத்துவர முடிந்ததென்றும் சுட்டிக்காட்டினார்.

## டிஜிட்டல் பட்டுப்பாதை அமைப்பில் தீவிரம் காட்டும் சீனா

# 1.3 டிரிலியன் டொலர் செலவில் திட்டம் செயற்பாட்டில்

ஆசிய, ஆபிரிக்க நாடுகளை உள்ளடக்கியதாக கடல்பட்டுப்பாதையை அமைக்கும் திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சீனா தற்போது 140 நாடுகளை உள்ளடக்கியதாக ஒரு பிரமாண்டமான டிஜிட்டல் பட்டுப்பாதையை உருவாக்கும் முயற்சியில் தீவிரம் காட்டி வருவதாகவும் இதற்கான மொத்த செலவு 1.3 டிரிலியன் அமெரிக்க டொலராக இருக்குமென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் பொருளாதாரத்துறை தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

2027 இல் இந்தத் திட்டத்தின் கீழ் 2,500 டிஜிட்டல் வலையமைப்பு திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் போது அதன் பெறுமதி 3.7 டிரிலியன் டொலர்களாக இருக்குமெனவும் யூகிக்கப்படுகிறது.

இந்நாடுகளை இணைக்கும் இழை ஒளியியல் வடங்களை (Fiber optical cable) கடலுக்கு அடியில் அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படும் போது 59,488 கி.மீ. தூரத்தைக் கொண்டதாக டிஜிட்டல் வலைப்பின்னல் அமையுமென்றும் அதன் பிரகாரம் அடுத்த தலைமுறைக்கான 5 ஜி தொலைத் தொடர்ப்புதொழில்நுட்பத்தில்உலகில் முதன்மை நாடாக அமையுமென்றும் எதிர்வு கூறப்படுகிறது.

மேலும் 240 மில்லியன் டொலர் செலவில் ஹூவாவி டெக்னோலொஜி நிறுவனம் பாகிஸ்தானை மையப்படுத்தி கிழக்கு ஆபிரிக்காவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது. மேலும் ஹூவாவி நிறுவனம் இதன் பொருட்டு பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள், தனியார் மற்றும் நிறுவனங்களின் அந்தரங்கத் தன்மைக்கு பங்கம் விளைவிக்கப்பட முடியும் என்ற அச்சுறுத்தலும் உள்ளதாக பொருளாதார அவதானிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த கடல் இழை ஒளியியல் வடம் அமைக்கும் திட்டத்தின் ஊடாக உலக இழை ஒளியியல் வடம் அமைப்பின் 60 சதவீதத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சீனா முயற்சிப்பதாகவும் அவதானம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABK-8904 | பஜாஜ் | 2016 | பாணடுரா |
| ABN-4165 | பஜாஜ் | 2016 | பாணடுரா |
| ABM-5625 | பஜாஜ் | 2016 | பாணடுரா |
| ABH-2027 | பஜாஜ் | 2015 | கண்டி |
| AAX-1022 | பஜாஜ் | 2015 | அனுராதபுரம் |
| ABH-0855 | பஜாஜ் | 2015 | அம்பாரா |
| ABD-0512 | பஜாஜ் | 2015 | குருநாகல் |
| ABJ-7099 | பஜாஜ் | 2015 | எம்பிலிபிட்டிய |
| AAZ-4239 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAW-3134 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAR-9285 | பஜாஜ் | 2014 | குருநாகல் |
| AAQ-6453 | பஜாஜ் | 2014 | ரத்தினபுர |
| AAW-2132 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAH-4292 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAF-7082 | பியாஜியோ | 2013 | அம்பாரா |
| AAN-6537 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAL-8910 | பஜாஜ் | 2013 | ராகம |
| YL-8666 | பஜாஜ் | 2011 | அம்பாரா |
| YQ-9922 | பஜாஜ் | 2011 | ரத்தினபுரி |
| YI-0957 | பஜாஜ் | 2011 | ராகம |
| YP-7958 | பஜாஜ் | 2011 | ராகம |
| YH-2193 | பஜாஜ் | 2010 | நுவரெலியா |
| QZ-4363 | பஜாஜ் | 2010 | நுவரெலியா |
| QX-2257 | பஜாஜ் | 2010 | பாணடுரா |
| QR-9183 | பஜாஜ் | 2008 | பாணடுரா |
| QN-9962 | பஜாஜ் | 2008 | மாதரா |
| QL-0664 | பஜாஜ் | 2007 | பாணடுரா |
| QD-6314 | பஜாஜ் | 2005 | ராகம |
| QD-2757 | பஜாஜ் | 2005 | ரத்தினபுரி |
| QB-6733 | பஜாஜ் | 2005 | மாதரா |

| மோட்டார் வாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAD-7607 | மஹிந்திரா | 2016 | ராகம |
| DAA-5877 | டாடா | 2014 | ராகம |

| இரட்டை நோக்கம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PV-4326 | மஹிந்திரா | 2013 | திருகோணமலை |
| PU-3853 | மஹிந்திரா | 2012 | அம்பாரா |
| PQ-6005 | டாடா | 2011 | ராகம |
| PB-7353 | FOTON | 2007 | கண்டி |
| 53-0464 | டொயேட்டா | 1989 | குருநாகல் |

| மோட்டார் வாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LM-7568 | JAC | 2017 | ராகம |
| LK-1483 | ISUZU | 2016 | ரத்தினபுரி |
| LG-2656 | டாடா | 2008 | ராகம |
| GX-7787 | மஸ்தா | 1997 | நுவரெலியா |

| மோட்டார் வாகன்ம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CAH-8162 | சுசுகி | 2015 | ராகம |
| CAB-6445 | டொயேட்டா | 2013 | ராகம |
| KT-5576 | மைக்ரோ | 2012 | குருநாகல் |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0773 951 796
திருகோணமலை 0769 138 400
ரத்தினபுரி 0774 857 351
கண்டி 0773 972 860
நுவரெலியா 0777 717 562
அனுராதபுரம் 0767 139 916
அம்பாரா 0773 547 556
குருநாகல் 0764 425 205
எம்பிலிபிட்டிய 0773 610 188
பாணடுரா 0775 215 263
மாத்தறை 0743 601 121

The Housewives' companion
Classifieds on
Daily News



**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல்/ நிலைமாறலின் தரைத் தளத்தில் ஓய்வறை ஒன்றை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டி ரீதியான விலைமனு கோரல்**

**(கேள்வி இல. 0006/T/2022)**

**விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதியை நீடித்தல்**

2023 மே 24ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரலுக்கான அழைப்பு தொடர்பானது.

விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி 2023 ஜுன் 14ஆம் திகதியிலிருந்து 2023 ஜுன் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் கொழுமபு-01, உலக வர்த்தக மையம், மேற்குக் கோபுரம், 30ஆம் மாடி, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சில் விலைக்கோரல்கள் 2023 ஜுன் 28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் அதன்பின் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**30ஆம் தளம், மேற்குக் கோபுரம்,**
**உலக வர்த்தக மையம், கொழும்பு 01.**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.06.12
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5143 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 9 6 9 8 5 7

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1491 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 329,113,706.00
ஆங்கில எழுத்து D — சுப்பர் இலக்கம் 16 — வெற்றி இலக்கங்கள் 02 04 35 44
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 452 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,328,922.80
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 17 23 38 56 — விசேட இலக்கினம் ரிஷபம்

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1173 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,625,529.20
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 13 48 61 62

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1598 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,381,308.72
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 9 3 2 9 3 3

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3385 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,336,533.20
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 21 27 49 78

# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாணத்தை முதன்மை மாகாணமாக மாற்றுவதே எனது பணி

## மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

(அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்)



கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற வளங்களினை வினைத்திறனாக பயன்படுத்துவதன் மூலம், கிழக்கு மாகாணத்தை முதன்மையான மாகாணமாக மாற்றி, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பங்களிப்பு வழங்க முடியும் என, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுடன் திங்கட்கிழமை (12) நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ஊடகவியலாளர்கள் மூலம் தான் ஒரு மாகாணத்தினையோ அல்லது நாட்டினையோ முதன்மை நிலைக்கு கொண்டு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற முடியும். நான் முதன்முதலாக எனது வாசஸ்தலத்திற்கு ஊடகவியலாளர்களை அழைத்திருப்பதன் நோக்கமும் அந்த அடிப்படையில் தான். ஊடகவியலாளர்கள் மாகாணத்தில் காணப்படுகின்ற குறைகளை நேரடியாக ஆளுநர் அலுவலகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி தெரிவிப்பதன் மூலம், பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு தன்னால் முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களும் பங்களிப்பு செய்ய வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணம் சுற்றுலாத் துறை, விவசாயத்துறை, மீன் பிடித் துறை, வணிகத்துறை, கைத்தொழில் துறை மற்றும் போக்குவரத்து துறைகளினை அபிவிருத்தி செய்வதன் மூலம் கிழக்கு மாகாணத்தினை முதன்மை நிலைக்கு கொண்டு வர முடியும்.



அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.றாஸீக்கீன் சேவையினை பாராட்டி, தமிழ் லெட்டர் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனையில் ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்ற கௌரவிப்பு விழாவில், ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் பொன்னாடை போத்தி நினைவுச் சின்னம் வழங்குவதையும், பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் உட்பட அதிதிகள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

# 'திருகோணமலை பெரியார்கள்' எனும் நூல் வெளியிட்டு வைப்பு

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)



வைத்திய கலாநிதி அருமைநாதன் ஸதீஸ் குமாரின் 'திருகோணமலைப் பெரியார்கள்' என்ற நூல் கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு குச்சவெளி பிரதேச செயலாளர் கு.குணநாதன் தலைமை தாங்கினார். ஆசியுரையினை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதீன கர்த்தா வேதாகமமாணி சோ.இரவிச்சந்திரக் குருக்கள் வழங்கினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வின் வரவேற்பு மற்றும் நிகழ்ச்சி தொகுப்பினை சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் வி. குணபாலா வழங்கினார்.

இந்நூலில் திருகோணமலை மண்ணில் வாழ்ந்த மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழுக்கும் சைவத்திற்கும் சேவையாற்றியவர்களின் விபரங்கள் தொகுக்கப்பட்ட ஆவணமாக இந்நூல் அமைந்திருந்தது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் பெருமளவிலான கல்வியாளர்கள், ஆன்மீக பணியாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் டெங்கு சோதனை

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் திங்கட்கிழமை (12) டெங்கு பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

களுவாஞ்சிகுடி பொதுசுகாதார வைத்திய பிரிவினரின் ஏற்பாட்டில் பிரதேச செயலக உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் விளையாட்டுக் கழக உறுப்பினர்களும் இணைந்து பல பகுதிகளிலும் பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது பொது இடங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், மக்கள் குடியிருப்புக்கள் என பல இடங்களிலும் நேரடி கள விஜயங்களை மேற்கொண்டு மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதோடு, டெங்கு பரவும் சூழலை வைத்திருந்தவர்கள் இதன்போது எச்சரிக்கப்பட்டு அவ்விடங்களை உடன் துப்புரவு செய்யுமாறும் எச்சரிக்கப்பட்டனர்.

எதிர்வரும் மழை காலத்தில் எமது பகுதியிலும் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகம் காணப்படுவதனால், நாம் முற்கூட்டியே எமது பிரதேசத்தை டெங்கு நோய் அற்ற பிரதேசமாக மாற்றுவதற்றாக டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளை நாம் விளையாட்டுக் கழகங்கள், பிரதேச செயலக உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு உத்தியோகஸ்த்தர்களுடனும் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக இதன்போது களுவாஞ்சிகுடி பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர் கே.இளங்கோவன் இதன்போது தெரிவித்தார்.

# திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி கல்முனைக்கு விஜயம்



(கல்முனை குறூப் நிருபர்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, திங்கட்கிழமை (12) கல்முனைக்கு விஜயம் செய்தார்.

கல்முனைத் தொகுதி அமைப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ்.எம் அப்துர் ரஸ்ஸாக் தலைமையில் கல்முனைத் தொகுதி காரியாலயத்தில் இடம்பெற்ற, மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கட்சியின் எதிர்கால திட்டங்கள் சம்பந்தமாகவும் சமகால தேசிய அரசியல் சம்பந்தமாகவும் தெளிவுபடுத்தினார்.

இக்கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஏ.கபூர், எம்.எம். ஜெமீல் உட்பட மாவட்டத்தின் அமைப்பாளர்கள், முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருக்கும் கட்சியின் உறுப்புரிமை அட்டைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# கசிப்புடன் மூவர் கைது

மட்டக்களப்பு குறூப் நிருபர்

கொக்கட்டிச் சோலையிலிருந்து முச்சக்கர வண்டி மூலம் காத்தான்குடி பிரதேசத்திற்கு 12,000 மில்லி லீற்றர் கசிப்பை கடத்திய மூன்று சந்தேக நபர்களை கர்பலா பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை வஸ்த்து ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம். சியாம் தெரிவித்தார்.

கர்பலா பகுதியில் நடாத்தப்பட்ட திடீர் தேடுதலின்போது முச்சக்கர வண்டியில் கசிப்பு விற்பனை செய்த மேற்படி சந்தேக நபர்களை போதை வஸ்த்து ஒழிப்பு பிரிவு பொலிஸ் குழுவினர் கைது.

# மட்டக்களப்பில் விவசாய நவீன மயமாக்கல்; கிழக்கு ஆளுநர் நேரில் சென்று பார்வை

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் சிவப்பு இன மாதுளை தோட்டங்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரில் சென்று திங்கட்கிழமை (12) பார்வையிட்டார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை தீர்த்து வைக்குமுகமாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய விவசாய அமைச்சு, கிழக்கு மாகாணத்தில் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரித்து, வெளிநாட்டு நிதிகளை சேகரிப்பதற்கு கூடிய கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய கிழக்கு மாகாணத்தில் உலக வங்கியின் நிதி உதவியில் நவீன மயமாக்கல் விவசாய திட்டத்தில், சுமார் இருநூறு கோடி ரூபாய் செலவில் வாழை, சிவப்பு மாதுளை, பச்சை மிளகாய், நிலக் கடலை, கெக்கறிகாய் உட்பட பலவகையான பழவகைகள் மற்றும் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, இலவசமாக நீர்ப்பம்பிகள், உழவி யந்திரங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் கே. கருணாகரன், உள்ளிட்ட அரச உயரதிகாரிகளும் விவசாயிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, களுதாவளை, செங்கலடி, வெல்லாவெளி உட்பட பல பிரதேசங்களில் சிறப்பாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

# இரு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

(மணல்சேனை நிருபர்)



சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்க பொருளாளர் க.துரைநாயகத்தின் சொந்த நிதியில் சுவிஸ் உதயம் அமைப்பின் ஊடாக, சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட அன்னமலை ஸ்ரீசக்தி வித்தியாலயத்தில், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு, பாடசாலை அதிபர் பொ.பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதிகளாக சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்க பொருளாளர் க.துரைநாயகம், சம்மாந்துறை வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரகுமார், சிறப்பு அதிதிகளாக முன்னாள் பிரதி வலய கல்விப் பணிப்பாளரும் சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண தலைவருமான மு.விமலநாதன், முன்னாள் பிரதிக்கல்வி பணிப்பாளரும் அமைப்பின் உப தலைவருமான கன.வரதராஜன், சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண சங்கத்தின் செயலாளர் திருமதி ரொமிலா செங்கமலன் உட்பட அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடியில் டெங்கு செயலணிக் கூட்டம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பிரதேச டெங்கு தடுப்பு செயலணியின் கூட்டம் (12) திங்கட்கிழமை காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளரும் காத்தான்குடி பிரதேச டெங்கு தடுப்பு செயலணியின் தலைவருமான யு.உதய ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நசிரீதீன் மேற்பார்வையில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம்.எம்.பசீர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது காத்தான்குடி பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் மேற் கொள்ளப்பட்டு வரும் டெங்கு தடுப்பு கள நடவடிக்கை தொடர்பாக ஆராயப்பட்டன.



திருகோணமலை சிறைச்சாலையில் சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் வசந்த குமார டேப்புக்கு பிரியாவிடை வைபவம் சனிக்கிழமை (10) நடைபெற்றது. இதன் போது திருகோணமலை சிறைச்சாலையில் சிறைச்சாலை அத்தியட்சகராக கடமையாற்றிய அத்தியட்சகருக்கு நினைவுச் சின்னமும், வாழ்த்துப்பாவும் வழங்கி கௌரவிக்கப்பட்ட போது. (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# ஊடகவியலாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி பட்டறை



(இறக்காமம் தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் ஊடாக, ஊடகப் பணியை மேற்கொள்ளல் தொடர்பிலான ஒரு நாள் பயிற்சி பட்டறை அம்பாறை உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது. அம்பாறை மாவட்ட பிரதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் வசந்த சந்திரபாலவின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# புதிய மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் 20இல் ஆரம்பம்

(ஒலுவில் விசேட நிருபர்)

பாலமுனை விவசாய பாடசாலைக்கு 2022/2023ஆம் ஆண்டுக்கான ஆங்கில மொழி மூல விவசாய உற்பத்தி தொழில்நுட்பக் கல்வியை பயில்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள, புதிய பயிலுனர் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (20) ஆரம்பிக்கப்படவுள்ளதாக, விவசாயப் பாடசாலையின் அதிபர் ஏ.எஸ். எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஒரு வருட கால விவசாய உற்பத்தி தொழில்நுட்ப கற்கை நெறியை பயில்வதற்கு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள 61 புதிய பயிலுனர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார். இக் கற்கை நெறிக்கு அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை உட்பட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் இப் பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வருட கால விவசாய உற்பத்தி தொழில்நுட்ப கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேறும் பயிலுனர்கள் 06 மாத காலம் அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களிலில் தொழில் முன்னோடி பயிற்சிக்காக இணைக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இப்பாடசாலைக்கு 07ஆவது தொகுதி பயிலுனர் மாணவர்களே இவ்வாண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

**இலங்கை சனநாயக, சோசலிச குடியரசு**

**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு (PIU) - வடமத்திய மாகாணம்**

**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம் (HSEP)**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| திகதி: | 14 ஜூன் 2023 |
| கடன்/மானிய இல. மற்றும் தலைப்பு | ADB கடன் இல. 3727 - சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | 1. HSEP/PIU/NCP/POL/W-15/Bal. Work /2023/02<br>W-15 வேலைகளுக்கான பெறுகை (சுற்று - 02 மிகுதி வேலைகள்) - பொலன்னறுவை மாவட்டத்தில் PMCU ஒன்றை நிர்மாணித்தல் / புதுப்பித்தல்<br>2. HSEP/PIU/NCP/ANU/W-16/Bal. Work/2023/02<br>W-16 வேலைகளுக்கான பெறுகை (சுற்று - 02 மிகுதி வேலைகள்) - அனுராதபுரம் மாவட்டத்தில் இரண்டு எண்ணிக்கையான PMCU/DH நிர்மாணித்தல் |
| தொகுதிகள் (Lots) | W15<br>Lot. E: அசேலபுர PMCU<br><br>W16<br>Lot. C: லபுனொருவ PMCU<br>Lot. F: ஹபரன DCH |
| விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் | 12 ஜூலை 2023 |

1. சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக இலங்கை சனநாயக, சோசலிச குடியரசு அரசாங்கமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) நிதியுதவியைப் பெற்றுள்ளது. இந்நிதியின் ஒரு பகுதியானது மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள அங்கத்துவ நாடுகளும் இவ்விலைமனுக்கோரலில் பங்குபெற்றலாம்.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள சுகாதார நிலையங்களின் புதிய நிர்மாணங்கள் / புதுப்பித்தல்கள் உட்பட்ட நிர்மாணங்கள் மற்றும் பூர்த்தியாக்கல் வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் செயலாளர் அலுவலகத்தின் கீழ் (வேலை கொள்வோர்), கொழும்பு-08, இல. 3/19, கின்சி வீதி, சுகாதார முறைமைகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின், செயற்றிட்டப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| தொ. இல. | ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு | லொட் | சுகாதார நிலையத்தின் பெயர் | வகுதி | மொத்தப் பரப்பளவு (சதுர அடிகள்) |
|---|---|---|---|---|---|
| 1. | HSEP/PIU/NCP/POL/W-15/Bal.Work /2023/02<br>W-15 வேலைகளுக்கான பெறுகை (சுற்று - 02 மிகுதி வேலைகள்) - பொலன்னறுவை மாவட்டத்தில் PMCU ஒன்றை நிர்மாணித்தல் / புதுப்பித்தல் | LOT - E | அசேலபுர | PMCU | 2,739.00 |
| 2. | HSEP/PIU/NCP/ANU/W-16/Bal. Work/2023/02<br>W-16 வேலைகளுக்கான பெறுகை (சுற்று - 02 மிகுதி வேலைகள்) - அனுராதபுரம் மாவட்டத்தில் இரண்டு எண்ணிக்கையான PMCU/DH நிர்மாணித்தல் | LOT - C | லபுனொருவ | PMCU | 3,636.00 |
| | | LOT - F | ஹபரண | DHC | 4,802.00 |

3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிலையான விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பாவித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டிகளுக்கமைவாக இரு கடித உறையுடன் ஒற்றைக் கட்ட செயல்முறைக்கமைய திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நாடுகளுக்கு திறக்கப்பட்டுள்ளன.
5. பின்வரும் தகைமைகளுடன் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மட்டும் இந்த விலைமனுக் கோரலில் பங்குபற்றலாம்.

அ. நிதியிடல்

(i) முன்னைய நிதியல் ஆற்றுகை –விலைமனுதாரரின் தற்போதைய நிதி நிலைமையை விபரப்படுத்துவதற்காக கடந்த மூன்று (03) வருடங்களுக்கான (2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022) கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள்: கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை
- கூட்டாண்மை மற்றும் ஏக உரிமையாளர்கள்: கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட வருமான வரி திரும்பல் கடித்துடன் பட்டயக் கணக்காளர் / அங்கீகரிக்கப்பட்ட கணக்காளரினால் சான்றுபடுத்தப்பட்ட நிதி அறிக்கை

(ii) சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு – விலைமனுதாரரின் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட) ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வானது (பின்வரும் அட்டவணையைப் பார்க்க) நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது கடந்த 3 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| லொட் இல. | சுகாதார நிலையத்தின் பெயர் - தொகுதிகள் | இலங்கை ரூபா (மில்.) |
|---|---|---|
| W 15 | | |
| LOT - E | அசேலபுர PMCU | 54.77 |
| W 16 | | |
| LOT - C | லபுனொருவ PMCU | 107.82 |
| LOT - F | ஹபரண DCH | 85.16 |

(iii) நிதியிடல் வளம் - விலைமனுதாரர் (ஏற்புடையதாக இருந்தால் - பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள்) கீழே காட்டப்பட்டுள்ள வகையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் நிதியியல் கடப்பாட்டு பொறுப்புகள் தவிர்த்து இந்த ஒப்பந்தத்திற்கான மொத்தத் தேவைப்பாடாக அல்லது அதிகமாகக் கொண்டிருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| லொட் இல. | சுகாதார நிலையத்தின் பெயர் - தொகுதிகள் | இலங்கை ரூபா (மில்.) |
|---|---|---|
| W 15 | | |
| LOT - E | அசேலபுர PMCU | 7.87 |
| W 16 | | |
| LOT - C | லபுனொருவ PMCU | 15.50 |
| LOT - F | ஹபரண DCH | 12.24 |

ஆ. அனுபவம்

(i) இதனையொத்த தன்மை மற்றும் அளவுடனான ஒப்பந்தங்கள் - விலைமனுதாரர் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட – ஏற்புடையதானால்) இதனையொத்த உத்தேச வேலைகளில் கடந்த 5 வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமான அளவில் ஒப்பந்தக்காரராக அல்லது இணை பங்குதாரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தையாவது சித்திகரமான முறையில் பங்குபற்றி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழும் விலைமனுதாரரின் பங்குபற்றுதலின் மதிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை விட அதிகமாகவிருந்தால் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்.

| லொட் இல. | சுகாதார நிலையத்தின் பெயர் - தொகுதிகள் | இலங்கை ரூபா (மில்.) |
|---|---|---|
| W 15 | | |
| LOT - E | அசேலபுர PMCU | 21.91 |
| W 16 | | |
| LOT - C | லபுனொருவ PMCU | 43.13 |
| LOT - F | ஹபரண DCH | 34.07 |

(ii) ஒரு விலைமனுதாரர் பல வெற்றிகரமான (குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமான பதில்களைப் பெறும்) விலைக்கோரல்களைச் சமர்ப்பித்தால், விலைமனுதாரரின் திறன் மதிப்பீட்டுக் கொள்ளளவை மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் தேவைப்பாடுகளை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

- சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு
- நிதியியல் வளங்கள்
- ஒதுக்க வேண்டிய உபகரணங்கள் மற்றும்
- பணிக்கமர்த்த வேண்டிய ஆளணியினர்

முழுமையான மூலப்பிரமாண தகைமைகள் விலைமனு ஆவணங்களில் விபரப்படுத்தப்பட்டுள்ளன.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00) பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**செயற்றிட்ட பொறியியலாளர்,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்,**
**பழைய MOH கட்டிடம்,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**பண்டாரநாயக்க மாவத்தை,**
**அனுராதபுரம், இலங்கை.**
**மின்னஞ்சல் : hsep.piu.ncp@gmail.com**
**தொலைபேசி/ தொலைநகல்: 025-2227308**

6. ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை நிறைவேற்றல் வேண்டும்.

- W-15: வேலைகளுக்கான பெறுகை – (சுற்று – 2 மிகுதி வேலைகள்) பொலன்னறுவை மாவட்டத்தில் ஒரு PMCU நிர்மாணித்தல்/புதுப்பித்தல் மற்றும் / அல்லது W-16: வேலைகளுக்கான பெறுகை – (சுற்று – 2 மிகுதி வேலைகள்) அனுராதபுரம் மாவட்டத்தில் இரண்டு எண்ணிக்கையான PMCU/DH நிர்மாணித்தல் எனும் வேலைகளுக்கு விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு மேற்படி முகவரிக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்தல்.
- மீளளிக்கப்படாத கட்டணமாக பின்வரும் 08ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை 2023 ஜூலை 11ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் செலுத்தல் வேண்டும்.
- பணக் கொடுப்பனவு முறையானது பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம், - க/இல. 84149856 அல்லது மு.ப. 9.00 மணி பி.ப. 3.00 மணி வரையான காலப்பகுதியில் இலங்கை வங்கியில் பேணப்படும் 84149856 எனும் கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வைப்புச் செய்தல் வேண்டும்.

'உஸ்வெல்கொடவத்த மற்றும் உஸ்வெல்கொடபண்டாரே புவக்வத்த இஹல கெபெல்ல' என அழைக்கப்படும் காணியின் காணித்துண்டு இல. 7 மற்றும் காணித்துண்டு இல. 8 என்பவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட காணித்தண்டு A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி தென் மாகாணம், காலி மாவட்டம், தவலம பற்று, தவலம பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 226 A, ஹிந்தும வடக்கு என்ற கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள ஹிந்தும கிராமத்தில் அமைந்துள்ளதுதோடு கிழக்கில் தவலம – உடுகம பிரதான வீதியையும் தெற்கில் அதே காணியின் காணித்துண்டு இல. 6ஐயும் மேற்கில் அதே காணியின் காணித்துண்டு இல. 9ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஜி.டி.யு. கருணாரத்ன தயாரித்த 2003.06.30ஆம் திகதிய 1100/2003 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் (ஏ1-ரூ0-பே0) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இம் முக்கோணக் காணி காலி மாவட்டக் காணிப் பதிவகத்தில் W 21/79 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை

**Machineries**

a) Trough and Withering Section (Second Floor / Level-3)
- 20 Nos. of Trough Withering Units (four of 60'x 6') constructed with hardwood and plywood, cladding over angle iron and wooden structures, GI mesh, with 7.5HP motors in good working condition
- 4 Nos. of specially designed exhausted fans

b) Roller Section
- 07 Nos. of 47", ( 350kg /20m) "Gamini" Tea Roller, completed with 20 HP motor batons and brass cones and starter switches in good working condition about 6-year-old
- 07 Nos. of Tea Roll breakers (12.5' x 3.5') in good working condition
- 01 No. of Humidifier with complete accessories (with sensor) in good working condition about two years old
- Rolling room auto mated system and conveyer system installed by Gamini Engineering

c) Drier Section
- 01 No. of 5ft, Browns three stage pressure drier completed with 1D fan, Main fan gear motor, starter and other accessories in good working condition.
- 01 No. of 6ft. Browns DCD completed with 1D fan, Main fan gear motor, starter and other accessories in good working condition.
- 01 No. of 6ft. Rodrigo four stage pressure drier completed with 1D fan, Main fan gear motor, starter and other accessories in good working condition.
- 02 No. of Fiber mat, six cylinders completed with 2 H.P motor and switch in good working condition
- 1 No. of specialty designed exhausted fans

d) Sifters and packing
- 02 No. of Middleton sifter (6'x 3.5') completed with 3.5 HP motor and starter switch, good working condition about 4 years old
- 01 No. of Chota Sifter (RPM 180) completed with 3.5 HP motor and starter switch, good working condition about 4 years old
- 16 Nos. of Michie Sifters (10'x 5' steel tray) completed with 3.5 HP motor and starter switch, good working condition
- 03 No. of Suction Winnowers (600kg/hr) with conveyor, 3 HP motor and starter switch (CCC), good working condition about seven years old
- 01. No. of MEYER 9000W colour separator machine installed about 4 months ago in good working condition
- 02 No. of NANTA 8300W colour separator machine with all accessories in good working condition about 10 years old
- 01 No. of NS 600 Super Shizioka colour separator machine with all accessories in good working condition about 6 years old
- 01 No. of NS 40 Super Shizioka colour separator machine with all accessories in good working condition about 6 years old

e) Other Machines
- 01 No. of OLYMPUS generator, 275 KVA, made in UK, in good condition
- 01 No. of firewood splitter with 5HP motor and starter (HARDYMEX), in good working condition about 6 years old
- Panel board and wiring system
- 02 Nos. "Walker" Brand new 40.0" single action tea rollers complete with 20 HP motors, starters, in good working condition about 11 years old
- 01 No. "Walker" Brand new 46.0" single action tea roller complete with 20 HP motors, starters in good working condition 2009 - about 2 years old
- 02 Nos. "Walker" Brand new 47.0" single action tea rollers complete with 20 HP motors starters in good working condition 2007 - about 4 years old
- 02 No. "CCC " Brand new 47.0" single action tea roller complete with 20 HP motors, starters in good working condition 2007 - about 4 years old
- 01 No. "Walker" 36.0 "single action tea roller complete with 10 HP motors, starters not working condition - 11 years old
- 04 Nos. "Fab Engineers" Brand new Roll breakers (12 x 3'.5") with 2.5 HP motors starters in working condition - about 3.5 years old
- 01 No. Brand new Tea drier – 4 feet, 3 stages, "Sirico" 20.0 H.P. Capacity 125kg ph - about 6 years old
- 01 No. "Browns" brand new Tea drier – 5 feet, 3 stages, Capacity 240Kg ph 2006 - about 5 years old
- 01 No. 3T stalk extractor complete with motor and starter 2006 - about 5 years old P.P. Jinadasa & Company
- 02 Nos. Middleton shifters with motor and starter - Brand new 2006 - about 5 years
- 08 Nos. Michie shifters complete with 2HP motors and starters, new machines
- 01 No. Chota shifter complete with 2HP motors and starters, new machine
- 02 Nos. Dust fans 3-feet diameter - about 3 years old working condition
- 03 Nos. suction wind overs with 5HP motor (CCC) - about 2 to 4 years old
- 01 No. "Sunvec" color sorting machine 7,500BTR, 800W 250kg per hour, brand new 2008
- 01 No. "Sunvec" electronic color sorting machine GTS 1,200B with air compressor, motors - about 3 years Brand new, working condition
- 01 No. "Nanta" colour separator model 7,000T with CD camera & motors
- 01 No. "Super Shizuoka" brand new color separator with electric motors - about 3 years old in good working condition
- 20 Nos. withering trough 60'x 6' timber structure complete with 2'x2' GI mesh and nylon netting to spreading bed 48" diameter air input fan unit complete with square and triangular mixing chamber c/w 5½ HP motors - about 16 years old
- 01. Tea cutter – 6 months, brand new, Jinasena & Co.
- 01 No. Fibro mat machine 2005 - about 6 years old
- 01 No. Tea packer - about 6 years old
- 01 No. set of humidifiers – 01 years old
- 01 No. Firewood splitter with 3.5HP motor 2009 - about 2 years
- 01 No. Generator - "Denyo" recondition KVA 150 - about 6 years old
- 01 No. Generator - "Olimpus" made in UK KVA 250, brand new - about 2 years old

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

திருமதி. ஜி.ஏ.ரி. நிமேஷிகா
முகாமையாளர்
இலங்கை வங்கி
தவலம
திகதி: 08.06.2023

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

afc

# தங்கக் கடன் சேவை
# தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.03.2023 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 22.06.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

## தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

## ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதி இராஜகிரிய

22.06.2023

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து

எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி

சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்

எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ

722, கோட்டை வீதி இராஜகிரிய

தொலை : 0115 573600


**மின்வலு மற்றும் சக்தி அமைச்சு**

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**

## நீடிப்பு அறிவித்தல்

### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் தடயவியல் கணக்காய்வொன்றை நடாத்துவதற்காக உசாத்துணையாளரொருவரை தெரிவு செய்தல்

### B/16/2023

மேலேயுள்ள தலையங்கத்தின் கீழ் இந்த புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக விலைமனுக்கோரல் ஆவணத்தை ஏற்கனவே கையேற்றுக் கொண்ட வளமுள்ள உசாத்துணை நிறுவனங்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் ஈர்க்கின்றது.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் தினமானது 2023.06.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு என நிச்சயப்படுத்தப்பட்டது எனினும் இப்போது 2023.06.30ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு என நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னைய விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகளிலும் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**திணைக்கள உசாத்துணையாளர் பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா., பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி : 0094 11 5455331**
**தொலைநகல் : 0094 11 5455424**

Lanka Salt Ltd.

# பின்னப்பட்ட தென்னம் ஓலைக்கான வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரல்

SLS மற்றும் ISO 9001-22000 தரத்தினையுடைய நாட்டின் மிகப்பெரிய உப்பு உற்பத்தியாளர்களான லங்கா சோல்ட் லிமிட்டட் நிறுவனத்தின் மஹலேவாய, ஹம்பந்தோட்டை, புன்தல உப்பளம், பலட்பான உப்பளம் ஆகிய உப்பளங்களுக்கு தென்னம் ஓலையை பெற்றுக் கொள்வதற்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தென்னம் ஓலைகளி அளவு - 200000 | | | |
|---|---|---|---|
| பின்னப்பட்ட தென்னம் ஓலையின் அளவு நீளம் 6 அடி அகலம் 09 அங்குலம் | ஹம்பாந்தோட்டை பெரிய உப்பளம் வரை | ஹம்பாந்தோட்டை பெரிய உப்பளம் முதல் புன்தல வரை தூரம் 16 km | ஹம்பாந்தோட்டை பெரிய உப்பளத்திலிருந்து பலடபான வரை தூரம் 50 km |
| போக்குவரத்து கட்டணத்துடன் தென்னம் ஓலையின் விலை | | | |
| போக்குவரத்து கட்டணம் இன்றி தென்னம் ஓலையின் விலை | | | |

அதனடிப்படையில் சரியாக (பெயர், முகவரி, தொ.பே. இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்யும் வங்கியின் விபரம் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட விலைகோரல் பத்திரங்கள் 2023 ஜுன் 28 பி.ப. 2.00 இற்கு முன்பு பதிவுத் தபாலில் அல்லது லங்கா சோல்ட் லிமிட்டட் பெரிய உப்பளம் ஹம்பாந்தோட்டை அலுவலகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் (இல. 01) கொண்டு வந்து உள்ளிடல்வேண்டும். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'தென்னம் ஓலை கொள்வனவு செய்தல்' என்று குறிப்பிடுதல் வேண்டும்) கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மேற்படி முகவரியில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**லங்கா சோல்ட் லிமிட்டட்**
**பெரிய உப்பளம், ஹம்பாந்தோட்டை.**

Tel 047-2037328, 047-2037329, 047-2037330, 047-20-37331
General Nomber - 047 2220208
Fax - 047-2220340
Email - supplyalsl@sltnet.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**சுகாதார அமைச்சு**

## களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் GICU (பொது தீவிர சிகிச்சை பிரிவு) இன் மத்திய வளிச் சீராக்கி அமைப்பின் நன்னிலைப்படுத்தல் மற்றும் பராமரிப்பு

1) 365 நாட்களுக்காக GICU (பொது தீவிர சிகிச்சை பிரிவு) இன் மத்திய வளிச் சீராக்கி அமைப்பின் நன்னிலைப்படுத்தல் மற்றும் பராமரிப்புக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2) தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

3) ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

   a. விலைமனுதாரர் மின் மற்றும் பொறிமுறை சேவைகள் பிரிவில் (EM4) அல்லது அதற்கு மேற்பட்ட துறையில் CIDA பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.

   b. விலைமனுதாரருக்கு முழு வசதியுடனான வேலைத்தளம் இருத்தல் வேண்டும். வேலைத்தள இடம், இருக்கும் உபகரணங்கள் முதலியவற்றின் விபரங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4) ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் உள்ளடங்குவன:

   a. விலைமனுதாரர் மின் மற்றும் பொறிமுறை சேவைகள் பிரிவின் (MVAC இல் EM4 அல்லது அதற்கு மேல்) கீழ் CIDA பதிவை பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர் வாடிக்கையாளர்களின் பெயர், அங்கீகரிக்கப்பட்ட நபரின் பெயர் மற்றும் தொடர்பு இல. முதலியவை போன்ற AC பணிகளின் பராமரிப்பு துறையில் உள்ள தமது அனுபவம் தொடர்பான விபரங்களை குறிப்பிடுதல் வேண்டும்.

   b. விலைமனுதாரருக்கு முழு வசதியுடனான வேலைத்தளம் இருத்தல் வேண்டும். வேலைத்தள இடம், இருக்கும் உபகரணங்கள் முதலியவற்றின் விபரங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

   c. விலைமனுதாரர் தகுதிபெற்ற மற்றும் அனுபவமுடைய பணியாளர்களை பெற்றிருத்தல் வேண்டும். குறைந்தது ஒரு ஊழியர் BSc தகைமை பெற்ற பொறியியலாளராக இருத்தல் வேண்டும். ஊழியர்களின் தகைமைகள் மற்றும் அனுபவம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

   d. விலைமனுதாரர் முன்னதாக மருத்துவமனை அல்லது ஏனைய நிறுவனங்களினால் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

5) ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023.06.15ஆம் திகதி தொடக்கம் 2023.06.21ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

6) வெட் உட்பட இலங்கை ரூபா நான்காயிரம் (ரூபா 4,000.00) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023.06.15ஆம் திகதி தொடக்கம் 2023.06.30ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை மேலுள்ள முகவரியில் களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

7) இரு பிரதிகளிலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.06.30ஆம் திகதி 11.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு மேலுள்ள முகவரியில் களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளரின் இடத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும்.

8) விலைமனுக்களின் இறுதித் திகதியில் இருந்த 80 நாட்களுக்கு விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு வேலை ஆரம்பிக்கப்பட்ட பின் பராமரிப்பு வேலைக் காலம் 365 நாட்களாகும்.

9) அனைத்து விலைமனுக்களும் விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்களின் உட்பிரிவு 10இற்கு அமைய இலங்கையின் மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட 2023.10.27ஆம் திகதி வரை செல்லுபடியான (விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதில் இருந்து 119 நாட்கள்) இலங்கை ரூபா எழுபத்து ஐந்தாயிரம் (ரூபா 75,000.00) தொகை ஒன்றுக்காக களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளரின் பெயருக்கு வழங்கப்பட்ட விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட வடிவத்தில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் GICU இன் மத்திய வளிச் சீராக்கி அமைப்பின் நன்னிலைப்படுத்தி பராமரிப்புக்கான விலைமனு" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

10) எந்த ஒரு காரணமும் கூறாது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் எந்த நேரத்திலும் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கு மற்றும் விலைமனு ஒன்றின் எந்த ஒரு பகுதியையும் ஏற்பதற்கு களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு உரிமை உள்ளது. குறைந்த அல்லது எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பதற்கு வாடிக்கையாளர் கட்டுப்பட்டவரல்ல.

11) விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளரின் அலுவலகத்தில் 2023.06.23ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.

**பணிப்பாளர்,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில**

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரல் - 2023

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், பொலன்னறுவை

பொலன்னறுவை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த மற்றும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் முறையில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. அலுவலக உபகரணங்கள்**

| தொ.இல. | உபகரணங்கள் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறித் தொகை |
|---|---|---|---|
| 1 | Office Tables | 40 | 21.000.00 |
| 2 | Steel Glass Cupboards | 40 | 45,000.00 |
| 3 | Low Back Chairs | 65 | 15,000.00 |
| 4 | Photocopy Machines | 03 | 13,000.00 |
| 5 | Counter Chairs | 05 | 7.000.00 |
| 6 | Desktop Computers | 05 | 23,000.00 |
| 7 | Patient Gang Chairs | 76 | 45.000.00 |
| 8 | Domestic Refrigerators | 05 | 19.000.00 |
| 9 | 24000 BTU AC | 03 | 16,000.00 |
| 10 | Laptop Computers | 05 | 23,000.00 |
| 11 | Grass Cutters | 10 | 5,000.00 |
| 12 | Multimedia Projectors | 02 | 6,000.00 |
| 13 | Iron Racks | 50 | 58,000.00 |
| 14 | Heavy duty Plastic Pallets | 20 | 19,000.00 |

**02. மருத்துவ உபகரணங்கள்**

| தொ.இல. | உபகரணங்கள் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறித் தொகை |
|---|---|---|---|
| 1 | Electronic Scale | 01 | 4500.00 |
| 2 | Semi-Automated Bio chemistry Analyzer | 02 | 22,500.00 |
| 3 | Binocular Microscope | 02 | 12,000.00 |
| 4 | 32" Buckets Centrifuge | 02 | 24,000.00 |
| 5 | Bed Side Lockers | 100 | 37,000.00 |
| 6 | ETU Beds | 20 | 24,000.00 |
| 7 | Wheel Chairs | 10 | 6,000.00 |
| 8 | Bed Head Tables | 20 | 6,000.00 |
| 9 | Drugs trolleys | 10 | 11,000.00 |
| 10 | Dressing Trolleys | 10 | 11,000.00 |

**03. கணனி வலையமைப்பு முறைமையை மேம்படுத்துதல்**

| | | | |
|---|---|---|---|
| 1 | மெதிரிகிரிய ஆதார வைத்தியசாலையில் கணனி வலையமைப்பு முறைமையை மேம்படுத்துதல் | வழங்கல் மதிப்பீடு ரூபா 5.007,744.00 | 43,500.00 |

04. சுவதிவி சிகிச்சைக்கு பிரத்தியேக மருத்துவ அறிக்கைகளை (PMR) அச்சிடல்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குத் தேவையான சுவதிவி சிகிச்சைக்கு 27000 பிரத்தியேக மருத்துவ அறிக்கை (PMR) புத்தகங்களை அச்சிடுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுப் பிணை முறித் தொகை 40,000.00 ரூபாவாகும்.

1. தகைமை வாய்ந்த வழங்குநர்களும் விலைக்கோரல் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.
2. ஒவ்வொரு உருப்படிக்காகவும் தனித்தனியான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு உருப்படிக்கான விலைமனு மாதிரிப் படிவக் கட்டணம் 1000.00 ரூபாவாகும். ஒரு உருப்படிக்காக ஒரு விலைமனு மட்டும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒரு விண்ணப்பப் படிவத்துடன் பல விலைகளைச் சமர்ப்பித்தால் அந்த விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மீளளிக்கப்படும் பிணை முறியை ரொக்கப் பணமாக செலுத்தலாம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட 2023-09-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் நிலையிலுள்ள பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. சகல விலைமனுக்களையும் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2023'' எனவும் குறித்த உபகரணத்தின் பெயர் மற்றும் தொடரிலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பொதுவான விபரங்கள்**

05. இயைபுடைய விலைமனுக்களை 2023-06-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''தலைவர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், பொலன்னறுவை'' எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். சகல விலைமனுக்களையும் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த உருப்படியின் பெயர் மற்றும் இலக்கம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

06. 2023-06-13ஆம் திகதி முதல் 2023-06-23ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு மாதிரிப் படிவங்களை பொலன்னறுவை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளுக்கு அமைவாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதன் பொருட்டான மேலதிக விபரங்கள் தேவைப்படின் 027-2223259 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக கணக்காளரைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

07. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்து பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அனுப்புதல் வேண்டும்.

08. இந்த விலைகள் தொடர்பில் பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு.**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**பொலன்னறுவை.**

# பகிரங்க தங்க நகை ஏலவிற்பனை

ராகல/வலபனே/கீர்த்திபண்டாரபுர/முங்வத்த/ மத்துரட்ட/ ஹைபொரஸ்ட்/ மஹகுடுகல/ மெஸ்ட்/ உடபுசல்லாவை/ தெரிபெஹெ/ நில்தண்டாஹின்ன ஆகிய கிராமிய வங்கிகளில் 2021.05.01 முதல் 2022.04.30 வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் 2023.06.25 மற்றும் 26 ஆகிய தினங்களில் வ/ப புதிய வலப்பனே பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக கூட்ட மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்.**
**தொ. பே. இல. 052-2279638, 052-2279205**

## அறிவித்தல்

### அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 73வது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 2023 ஜுன் மாதம் 24ம் திகதி சனிக்கிழமை கேபிடல் சிட்டி ஹோட்டல் வங்கி வீதி பதுளையில் அமைந்துள்ள 'கிரிஸ்டல் கேட்போர் கூடத்தில்' நடைபெறும்.

**ஃபர்ஹாஸ் ஃபாரூக்**
**தேசிய பொதுச் செயலாளர்.**

# அபெக்ஷா வைத்தியசாலை – மஹரகம

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

- ❖ ரசாவி கட்டிடத்தில் 2023 /**2024** ஆம் ஆண்டுகளுக்காக குழாய் மருத்துவ வாயு முறைமையில் இயந்திராதிகள் மற்றும் ஆக்கக்கூறுகளின் தடைநீக்கல், சரியான பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்கல்
- ❖ 2023/**2024** ஆம் ஆண்டுகளுக்காக அபெக்ஷா வைத்தியசாலையில் (மஹரகம) **500 KVA, 300KVA-A, 300 KVA-B & 275 KVA**

அபெக்ஷா வைத்தியசாலையின் (மஹரகம) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பின்வருவனவற்றிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

- ➢ 2023/2024 ஆம் ஆண்டுகளுக்காக மின்பிறப்பாக்கி பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் சேவைகளுக்கான தடைநீக்கல் மற்றும் சரியான பராமரிப்பு மற்றும் சேவைகள்.
- ➢ கீழே விபரிக்கப்பட்டவாறு 2023/2024 ஆம் ஆண்டுகளுக்காக ரசாவி கட்டிடத்தில் குழாய் மருத்துவ வாயு முறைமையில் இயந்திராதிகள் மற்றும் ஆக்கக்கூறுகளின் தடைநீக்கல் மற்றும் சரியான பராமரிப்பு மற்றும் சேவை.

01. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாத வராகவும் விலைமனுதாரர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவு மிருத்தல் வேண்டும்.
02. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அபெக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.
03. 2022.07.04 ஆம் திகதி வரையும் வேலைநாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒரு அம்சத்திற்கு 3000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
04. விலைமனுக்கள் 49 நாட்கள் காலப்பகுதிக்குசெல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
05. 2022.07.05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த வங்கியிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி கம்பனியிடமிருந்து பெறப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

| பின்வருவனவற்றின் பராமரிப்பு மற்றும் சேவை | விலைமனுப்பிணையின் தொகை - ரூபாவில் |
|---|---|
| மின்பிறப்பாக்கியின் பராமரிப்பு மற்றும் பழுதுபாார்த்தல்கள் சேவை | 100,000.00 |
| ரசாவி கட்டிடத்தில் குழாய் மருத்துவ காஸ் முறைமையின் இயந்திராதிகள் மற்றும் ஆக்கக்கூறுகளின் | 30,000.00 |

06. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
07. மேலே குறிப்பிட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**பணிப்பாளர்,**
**அபெக்ஷா வைத்தியசாலை (மஹரகம).**

**தொலைபேசி: 0112-840233**
**தொலைநகல்: 0112-840233**

# பெறுகை அறிவித்தல்

### சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

## போதனா வைத்தியசாலை, அனுராதபுரம் ஆய்வுகூட உபகரணம் வழங்கல்

01. 2023-07-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை அனுராதபுரம் போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் கீழ்க்காணப்படும் ஆய்வுகூட உபகரணத்தின் வழங்கலுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | உபகரணம் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கட்டணம் | கேள்விப் பிணை முறி பெறுமதி |
|---|---|---|---|---|
| THA/AR/LP/BME/01/2023 | Fully automated coagulation Analyzer | 01 | 2,500.00 | 250,000.00 |

02. இலங்கை வியாபாரச் சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களினால் பெயரிடப்பட்ட அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் மட்டுமே இந்த கேள்வி அழைப்புகளில் கலந்துகொள்ள தகுதியுள்ளவர்களாவர்.
03. இதற்காக ஆர்வம் கொண்ட தகைமையுடைய வழங்குநர்களின் பிரதிநிதிகள் அல்லது பெயரிடப்பட்ட வழங்குநர்கள் கீழ்க்காணப்படும் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும்போது பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- I. அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுதப்பட்ட எழுத்துமூல விண்ணப்பம்
- II. அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி
- III. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியைச் சமர்ப்பித்தல்

**பெறுகைக்கு இயைபான பொதுவான விடயங்கள்**

- I. இந்த கேள்வியில் கலந்து கொள்வதற்காக அதிகாரம் வழங்கிய அல்லது அவர்களின் உற்பத்திக்காக முதன்மையாளரினால் உள்நாட்டு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டதற்கான சான்றிதழ் / கடிதத்தைச் சமர்ப்பித்தல்.
- II. உங்கள் கேள்வியின் பெறுமதி 05 மில்லியன் ரூபாவை விஞ்சுமானால் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொண்ட PCA3 சான்றிதழ்
- III. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட செல்லுபடியாகும் ஆவணங்கள் மட்டும் நகல் பிரதிகள் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. 2023-06-14ஆம் திகதி முதல் 2023-07-05ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அனுராதபுரம் போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை 0252222261-63 நீடிப்பு இலக்கம் 109/103 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
05. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலமோ சமர்ப்பிக்கலாம். 2023-07-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததும் வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் திறக்கப்படும் என்பதுடன் இதன் பொருட்டான கேள்வி முன்னோடிக் கூட்டம் 2023-06-24ஆம் திகதி அனுராதபுரம் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகின்றது.
06. அரச வேலை நாட்களில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் 2023-06-14ஆம் திகதி முதல் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**அனுராதபுரம்.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# கேள்விக்கான அழைப்பு

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை

## பொலன்னறுவை

1. பொலன்னறுவை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் நிர்மாணங்களுக்காக தகைமையுள்ள மற்றும் தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி சமர்ப்பித்தல் முறையில் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத ஒருவராக இருப்பதுடன், கட்டிட நிர்மாணத்திற்காக கீழ்க்காணும் CIDA பதிவுத் தரத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கணக்காளர், பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, பொலன்னறுவை (027-2223259) இடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கீழேயுள்ள கேள்வி ஆவணங்களை இந்நிறுவனத்திற்கு வருகை தந்து பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர் 2023.06.30ம் திகதி வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குள் இந்நிறுவனத்திற்கு எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்த பின்னர் ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை ஆங்கில மொழியில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொடர் இல. | வேலை பற்றிய விபரம் மற்றும் இயக்கம் | நிதித் தன்மை | மதிப்பிடப்பட்ட வேலை ஆகு செலவு (ரூ) | தேவைப்படும் குறைந்த பட்ச ICTAD தரம் | கேள்விப் பிணைப் பெறுமதி | ஒப்பந்த காலம் | கேள்வி ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | புலஸ்திகம பிரதேச வைத்தியசாலையின் சமையலறை மற்றும் ஆவண அறையை பழுதுபார்த்தல் (Repair of Kitchen and Record Room at Divisional Hospital Pulasthigama) | PSSP | 6.6 மில்லியன் | C6, C7, C8 | ரூ. 65,000.00 (77 நாட்கள் செல்லு படியாகும்) | 120 நாட்கள் | ரூ. 2,500.00 |

5. கேள்விகள் நகல் பிரதியுடன் 2023.07.04 மு.ப. 10.00 இற்கு முன் தலைவர், பெறுகைக்குழு, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, பொலன்னறுவை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுதுடன், அன்றே கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ்வேளையில் சமுகமளித்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
6. சகல கேள்வியுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு சமமான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் கேள்விப் பிணையமொன்றை அல்லது குறித்த தொகையை எமது திணைக்களத்தில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் - பொலன்னறுவை பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு வேறு வேறு இரு உறைகளில் இட்டு பொறியிட்டு இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. இப்பெறுகை சம்பந்தமாக பொலன்னறுவை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை.**
**பொலன்னறுவை.**

# பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

**මිනුම් ඒකක ප්‍රමිති හා සේවා දෙපාර්තමේන්තුව**
**அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்**
**MEASUREMENT UNITS STANDARDS AND SERVICES DEPARTMENT**

## 1995 இல 35 அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் திருத்தத்துடன் சம்பந்தப்பட்ட மக்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைக் கோரல்

1995 இல. 35 அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தை நாளது வரைக்கு உட்படுத்தி திருத்தப்படவுள்ளது. அங்கு அச்சட்டத்தில் தற்போதுள்ள பிரிவுகளை தேவைக்கேற்றவாறு மாற்றுவதற்கும் புதிதாக சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் இருப்பின் அவ்விடயங்களையும் உள்ளடக்கி குறித்த திருத்தங்களை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்திருத்தங்களுக்காக உங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

02. 1995 இல. 35 அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் www.measurementsdept.gov.lk என்ற அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அச் சட்டத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளக் கூடிய இணையதள Link முகவரி கீழ்க்காணுமாறு இருக்கும்.

https//www.measurementsdept.gov.lk/images/content_images/other/Act_of_Mussd.pdf

03. இங்கு தற்போதுள்ள சட்டத்தின் பிரிவுகளை திருத்துவதற்கான ஆலோசனைகள் இத்துடன் உள்ள மாதிரிப்பத்திரத்தின் பிரகாரம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.
04. அதனடிப்படையில் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தை நாளது வரைக்கு உட்படுத்தி திருத்துவதுடன் சம்பந்தப்பட்ட உங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் இம்மாதிரியின் மூலம் 2023.06.30ம் திகதிக்கு முன்பு அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் மாஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகம என்ற முகவரிக்கு அல்லது planning.mussde gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு கிடைக்கச் செய்யுமாறு அறிவித்துக் கொள்கிறேன்.
05. 2023.06.30ம் திகதியின் பின்னர் சட்டத்துடன் சம்பந்தப்பட்ட திருத்தங்களை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் அங்கு உங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை சமர்ப்பிக்காது இருப்பின் தேவைப்படும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை சட்டத்திற்கு உட்படுத்துவதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவதற்கு முடியாமல் போகும். என்பதை தெரிவிப்பதுடன் இது பற்றி உங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பை பெருமளவில் வரவேற்கிறேன்.

**எஸ். என். அக்குரன்திலக்க,**
**அளவீட்டு அலகுகள், நியமனங்கள் மற்றும்**
**சேவைகள் திணைக்களப் பணிப்பாளர்.**

### 1995 இல 35 அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்திற்கு ஆலோசனைகளை சமர்ப்பித்தல்

ஆலோசனைகளை சமர்ப்பிப்போரின் முழுப்பெயர்: ..........................................................................................
ஆலோசனைகளை சமர்ப்பிப்போரின முகவரி: ..........................................................................................
தொடர்பு கொள்ளக்கூடிய தொ.பே. இலக்கம்: ..........................................................................................
முகவரிக்குரிய மாவட்டம்: .................................................. தேசிய அடையாள அ. இல.: ............................

மேலே குறிப்பிடப்படும் சட்டத்திற்கு என்னால் கீழ் காணும் திருத்தங்களை உட்படுத்துவதற்கு பரிந்துரைக்கின்றேன்.

| தொ. இல. | சட்டத்தின் தற்போது காணப்படும் பிரிவு | அப்பிரிவை திருத்த வேண்டிய முறை | அத்திருத்தம் மேற்கொள்ள வேண்டிய காரணம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| **தொ. இல.** | **ஆலோசனை உள்ளடக்கப்பட வேண்டிய சட்டத்தின் பிரிவு மற்றும் பந்தி** | **புதிய சேர்க்கைகள்** | **அச்சேர்க்கைகளை மேற்கொள்வதற்கான காரணம்** |
| 1 | | | |
| 2 | | | |
| | | | |

(உங்களது ஆலோசனைகளுக்காக இவ் அட்டவணையில் மாதிரிக்கு அமைவாக வேறு தாள் ஒன்றை பாவிக்க முடியும்)

.....................................................                .................................
**ஆலோசனைகளை சமர்ப்பிக்கும் நபரின் கையொப்பம்**                திகதி

# பீ.எஸ்.ஜி அணியிலிருந்து விலக எம்பாப்பே முடிவு



பிரான்ஸ் கால்பந்து வீரர் கிலியான் எம்பாப்பே, பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பீ.எஸ்.ஜி) அணியில் இருந்து விலகப்போவதாக அறிவித்துள்ளார்.

அந்த அணியுடனான அவரது ஒப்பந்தம் அடுத்த ஆண்டு நிறைவடையவுள்ளது. அதை நீட்டிப்பதற்குத் திட்டம் இல்லை என்று எம்பாப்பே குறிப்பிட்டுள்ளார்.

பீ.எஸ்.ஜி கால்பந்து அணி அவரை எளிதில் விலகவிடாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த அணியின் நிர்வாகிகளுடனான பேச்சுவார்த்தையில் சிக்கல் ஏற்பட்டால் எம்பாப்பே இன்னொரு அணியுடன் விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்யலாம் என்று நம்பப்படுகிறது.

பீ.எஸ்.ஜி அணிக்கு விளையாடும் கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸி ஏற்கனவே அமெரிக்காவின் இன்டர் மியாமி அணியில் இணையப்போவதாக அறிவித்துள்ளார்.

மொனோகோ அணியில் இருந்து 2017 ஆம் ஆண்டு பீ.எஸ்.ஜி அணியில் இணைந்த எம்பாப்பே 260 போட்டிகளில் 212 கோல்களை பெற்றுள்ளார். அவர் கட்டாரில் கடந்த ஆண்டு நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பெற்ற ஹட்ரிக் கோல் உட்பட பிரான்ஸ் அணிக்காக 68 போட்டிகளில் 38 கோல்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆறு பருவங்களிலும் லீக் 1 தொடரில் அதிக கோல்களை பெற்றவராக பதிவாகி இருக்கும் எம்பாப்பே தனது ஆறு பருவங்களில் பீ.எஸ்.ஜி அணிக்கு ஐந்து முறை கிண்ணத்தை வென்றுகொடுத்துள்ளார்.

# எல்.பி.எல் ஏலம் இன்று: 360 வீரர்கள் பங்கேற்பு



கொழும்பு, ஷங்ரிலா ஹொட்டலில் இன்று (14) நடைபெறவுள்ள லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்) வீரர்கள் ஏலத்தில் பல முன்னணி சர்வதேச வீரர்கள் உட்பட மொத்தம் 360 வீரர்கள் ஏலம் விடப்படவுள்ளனர்.

எல்.பி.எல் டி20 தொடரில் முதல் முறையாக இடம்பெறும் இந்த வீரர்கள் ஏலத்தில் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் லைன் உட்பட அவுஸ்திரேலிய வீரர்கள் மற்றும் பிரெத்வெயிட், ஜேசன் சார்ல்ஸ் மற்றும் எவின் லுவிஸ் உட்பட மேற்கிந்திய தீவுகளின் வீரர்கள் பலரும் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த மூன்று பருவங்களிலும் அதிகமான பாக். வீரர்கள் இடம்பெற்ற நிலையில் இம்முறையும் அவர்களை போட்டியில் பங்கேற்கும் ஐந்து அணிகளும் வாங்குவதற்கு வாய்ப்பு உள்ளது.

இதில் இந்தியாவின் ஒரே வீரராக முன்னாள் துடுப்பாட்ட வீரர் சுரேஷ் ரெய்னா இடம்பெறிருப்பதோடு தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், அயர்லாந்து மற்றும் நியூசிலாந்து வீரர்களும் இந்த ஏலத்தில் இடம்பெற்றுள்ளனர்.

ரெய்னா அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் கடந்த ஆண்டு ஓய்வு பெற்றார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை விதிகளின்படி, இந்திய வீரர் மற்ற நாடுகளில் உள்ள லீக்குகளில் விளையாட அனைத்து வகையான உள்நாட்டு போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் ஏலம் துடுப்பாட்ட வீரர்கள், சகலதுறை வீரர்கள், வேகப்பந்து மற்றும் சுழற்பந்து வீச்சாளர்கள் மற்றும் விக்கெட் காப்பாளர்கள் போன்ற பல தேர்வுகள் அடிப்படையில் 51 சுற்றுகளாக நடைபெறவுள்ளது.

இந்த ஏலத்தில் ஓர் அணிக்கு நான்கு வெளிநாட்டு வீரர்கள் உட்பட குறைந்தது 16 வீரர்களை வாங்க முடியும். ஏற்கனவே ஒவ்வொரு அணியும் இரு இலங்கை வீரர்களுடன் சேர்த்து இரு வெளிநாட்டு வீரர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் ஒவ்வொரு அணியும் 21 வயதுக்கு உட்பட்ட இலங்கை வீரர் ஒருவரை வாங்குவது கட்டாயமாக உள்ளது.

ஒவ்வொரு அணியும் தலா 500,000 டொலர்களுடன் இந்த ஏலத்தில் மொத்தமாக 2.5 மில்லியல் டொலர்கள் செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏலத்திற்காக எடுத்துவரும் தொகையில் ஒவ்வொரு அணியும் குறைந்தது 85 வீதத்தை தமது அணியை அமைப்பதற்கு முதலிடுவதை உறுதி செய்ய வேண்டும்.

இன்றைய ஏலத்தை நடத்துபவராக இந்தியாவின் வர்ணனையாளர் சாரு ஷர்மா செயற்படவுள்ளது.

# புரூனேவை வீழ்த்தியது இலங்கை இளையோர்



தென்கொரியாவில் நடைபெற்றுவரும் ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது போட்டியில் புரூனே அணியை 82–16 என்ற புள்ளிகள் கணக்கில் இலங்கை அணி வீழ்த்தியுள்ளது.

முதல் போட்டியில் தென்கொரிய அணியை 94–08 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தியிருந்த இலங்கை இளையோர் அணி, கடந்த திங்கட்கிழமை (12) புரூனே அணியை எதிர்கொண்டது.

தங்களுடைய ஆரம்ப போட்டியை போன்று இந்தப் போட்டியிலும் மிகச் சிறந்த ஆரம்பத்தை பெற்றுக்கொண்ட இலங்கை 19–06 என முதல் காற்பகுதியை கைப்பற்றியது.

தொடர்ந்து 22–03, 20–03 மற்றும் 21–04 என ஆதிக்கம் செலுத்தியது.

இதில் இலங்கை அணிக்காக 41 முயற்சிகளில் 33 புள்ளிகளை அணித்தலைவி சஜினி ரத்நாயக்க பெற்றுக் கொடுத்ததுடன், டில்மி விஜேநாயக்க 35 முயற்சிகளில் 30 புள்ளிளை பெற்றுக்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மருது சம்பியன் கிண்ணம் இலவன் ஸ்டார் வசமானது



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று மருது விளையாட்டு கழகம் நடாத்திய மருது சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுத்தொடரில் தம்பட்டை இலவன் ஸ்டார் விளையாட்டு கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஆலையடிவேம்பு தர்ம சங்கரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை ரியல் மெற்றிக்ஸ் அணியை தம்பட்டை இலவன் ஸ்டார் அணி வீழ்த்தியது.

இந்தத் தொடரின் சிறப்பாட்டக்காரராக தம்பட்டை இலவன் ஸ்டார் அணியின் வீரர் சஹாந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

# முதல் இன்னிங்ஸில் 194 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது இலங்கை ஏ அணி



இலங்கை ஏ அணிக்கு எதிரான முதலாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க ஏ அணி தனது முதல் இன்னிங்ஸில் 131 ஓட்டங்களுக்கே சுருண்டது.

பல்லேகலவில் நடைபெற்றுவரும் இந்த நான்கு நாள் கொண்ட போட்டியின் இரண்டாவது நாளான நேற்றைய தின ஆட்டம் சீரற்ற காலநிலையால் 40 ஓவர்களுக்கு மட்டுப்பட்டதாக இருந்தது.

முதல் நாளில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 325 ஓட்டங்களை பெற்ற நிலையில் தென்னாபிரிக்க ஏ அணி நேற்று (13) தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது.

எனினும் முதல் ஓட்டத்தை பெறுவதற்கு முன்னரே தென்னாபிரிக்க ஏ அணியின் முதல் விக்கெட்டை வீழ்த்த வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்கவால் முடிந்தது. ஜேர்டன் ஹர்மன் முகம்கொடுத்த இரண்டாவது பந்திலேயே டக் அவுட் ஆனார்.

தொடர்ந்து மறுமுனையில் இருந்த அணித்தலைவர் டோனி டி சொர்சி 9 ஓட்டங்களுடன் லசித் எம்புல்தெனியவின் பந்துக்கு வெளியேறினார். நிதானமாக ஆடிய மத்தியூ பீட்ஸ்கே மாத்திரம் ஒருமுனையில் விக்கெட்டை பாதுகாக்க மறுமுனை விக்கெட்டுகள் மளமளவென்று பறிபோயின. 66 ஓட்டங்களுக்கே 5 விக்கெட்டுகளை பறிகொடுத்த தென்னாபிரிக்க ஏ அணிக்கு பின் வரிசை வீரர்களும் கைகொடுக்கவில்லை.

இதனால் அந்த அணி 40 ஓவர்களில் 131 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. பீட்ஸ்கே மாத்திரம் 93 பந்துகளில் 5 பௌண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களை பெற்றார்.

அவர் தவிர இருவர் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களை பெற்றதோடு ஒருவர் கூட 20 ஓட்டங்களையும் எட்டவில்லை.

இலங்கை அணிக்காக சிறப்பாக பந்து வீசிய லக்ஷித மானசிங்க 10 ஓவர்களுக்கு 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 05 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு வேகப்பந்து வீச்சாளர் மதுஷங்க 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதன்மூலம் இலங்கை ஏ அணி தென்னாபிரிக்காவை விடவும் முதல் இன்னிங்ஸில் 194 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும்.

# பீஜிங் விமான நிலையத்தில் தடுக்கப்பட்டார் மெஸ்ஸி



முறையான கடவுச்சீட்டு இன்றி சீனா சென்ற ஆர்ஜன்டீன நட்சத்திர கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி இரண்டு மணி நேரம் பீஜிங் விமானநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நட்புறவுப் போட்டியில் ஆடுவதற்காகவே மெஸ்ஸி தனது நண்பர்களுடன் கடந்த திங்கட்கிழமை (12) சீனாவை அடைந்ததார். எனினும் அவர் தனது ஆர்ஜன்டீன கடவுச் சீட்டுக்கு பதில் ஸ்பெயின் கடவுச் சீட்டை எடுத்து சென்றதால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதனால் சுமார் இரண்டு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்ட மெஸ்ஸி, விசா அனுமதியை பெற்ற பின்னரே விடுவிக்கப்பட்டுள்ளார்.

உலக சம்பியனான ஆர்ஜன்டீன அணி நாளை (15) பீஜிங்கில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராகவும், 19ஆம் திகதி ஜகார்த்தாவில் இந்தோனேசியாவுக்கு எதிராகவும் நட்புறவு போட்டியில் ஆடவுள்ளது.

# இறந்ததாக கூறிய பெண் சவப்பெட்டியில் விழித்தார்



ஈக்டோரியில் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்ட 76 வயது பெண் ஒருவர் சவப்பெட்டியில் வைத்து விழித்துக் கொண்டுள்ளார்.

சுகவீனமுற்ற பெல்லா மொன்டோயா என்ற அந்தப் முதிய பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பக்கவாதம் தாக்கி உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சவப்பெட்டிக்குள் நான்கு மணி நேரம் இருந்த அந்த பெண்ணை இறுதிக் கிரியைக்காக அலங்கரிக்க முயற்சித்தபோதும் அவர் உயிருடன் இருப்பதை குடும்பத்தினர் அவதானித்துள்ளனர்.

விழித்துக் கொண்ட அவர் மூச்சுவிட திண்டாடும் நிலையில், உடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அவர் தற்போதும் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொங்கோவில் சிறுவர்கள் உட்பட 46 பேர் கொலை



வடகிழக்கு கொங்கோவில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம் ஒன்றின் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் குறைந்தது 46 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் பாதி அளவானவர்கள் சிறுவர்களாவர்.

இடுரி மாகாணத்தில் இன ரீதியில் கொடிய கொலைகளில் ஈடுபட்டுவரும் ஆயுதக் குழு ஒன்றே கடந்த ஞாயிறு இரவு தொடக்கம் திங்கள் வரையான காலப்பகுதியில் இந்தத் தாக்குதலை நடத்தியதாக அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் ஒரு தசாப்தம் நீடித்த அமைதிக்குப் பின்னர் ஹெமா மற்றும் லென்டு சமூகங்களுக்கு இடையிலான மோதல் 2017இல் மீண்டும் வெடித்துள்ளது.

இதனால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதோடு 1.5 மில்லியனுக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

# உக்ரைனிய ஜனாதிபதியின் சொந்த ஊரில் ரஷ்யா ஏவுகணை தாக்குதல்: அறுவர் பலி



உக்ரைனின் மத்திய நகரான கிரிவி ரி மீது ரஷ்ய படைகள் கடந்த திங்களன்று (12) நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டு, குறைந்தது 25 பேர் காயமடைந்துள்ளனர்.

“துரதிருஷ்டவசமாக ஏற்கனவே ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன” என்று அந்த நகரில் இராணுவ நிர்வாகத் தலைவர் ஒலெக்சான்டர் வில்குல் தெரிவித்துள்ளார்.

பாரிய ஏவுகணை தாக்குதல்கள் இடம்பெறுவதாக முன்னர் கூறிய நிலையில் நேற்று அதிகாலை ஐந்து மாடி குடியிருப்புக் கட்டடம் ஒன்று தாக்கப்பட்டதாக இந்தப் பிராந்திய ஆளுநர் செர்ஹி லிசக் தெரிவித்துள்ளார்.

மூன்று குரூஸ் ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டபோதும் மற்றவை ஊடுருவிச் சென்றதாகக் கூறிய அவர், மக்கள் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று அச்சம் வெளியிட்டார்.

கிரிவி ரி உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கியின் சொந்த ஊராகும். அவர் இந்தத் தாக்குலுக்கு கண்டனத்தை வெளியிட்டுள்ளார். உக்ரைனின் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான இணைப்பாளரான டெனிஸ் பிரௌன், தாக்குதலை கண்டித்திருப்பதோடு, “பொதுமக்கள் மற்றும் பொதுமக்களின் உட்கட்டமைப்புகள் இலக்கு வைக்கக் கூடாது என்று சர்வதேச மனிதாபிமான சட்டம் தெளிவாகக் குறிப்பிடுகிறது” என்று தெரிவித்துள்ளார்.

தலைநகர் கீவிலும் வான் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. வடக்கு நகரான கார்கிவில் பொதுமக்கள் உட்கட்டமைப்புகள் மீது ஆளில்லா வான் தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த நகர மேயர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் ரஷ்ய தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. உக்ரைனில் தமது சிறப்பு இராணுவ நடவடிக்கையில் பொதுமக்கள் உட்கட்டமைப்புகள் இலக்குவைக்கப்படவில்லை என்று அது தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

எனினும் உக்ரைன் பதில் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்து சில கிராமங்களை ரஷ்யாவிடம் இருந்து மீட்டதாக அறிவித்திருக்கும் நிலையிலேயே ரஷ்யாவின் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தகர்க்கப்பட்ட ககோவ்கா அணையில் இருந்து பெருக்கெடுத்த நீரினால் ஏற்பட்ட வெள்ளத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை பத்தாக அதிகரித்துள்ளது. இதனால் 41 பேர் தொடர்ந்து காணாமல்போன நிலையில் இருப்பதாக உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுன் மாதம் 14ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.